
(TAMIL)

# HERE I STAND!

# நான் நிற்கும் கன்மலை



திருச்சபைச் சீர்திருத்தத்தின்
500ஆம் ஆண்டு நிறைவின்போது
நினைவுபடுத்தவேண்டிய சத்தியங்கள்
1517-2017

R. ஸ்டான்லி

*புராட்டஸ்டன்ட் & ரோமன் கத்தோலிக்கருக்கு
ஒரு செய்தி*

# “நான் நிற்கும் கன்மலை”
# “Here I stand!”

*திருச்சபைச் சீர்திருத்தத்தின்*
*500ஆம் ஆண்டு நிறைவின்போது*
*நினைவுபடுத்தவேண்டிய சத்தியங்கள்*
*1517-2017*

**R. ஸ்டான்லி,** B.E., M.Tech.
*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>*
*<evangeline@stanleyonbible.com>*

**"Here I stand!"** (Tamil)

Copyright 2017 R. STANLEY

First Edition : March 2017

இச்சிறுநூல் ஆங்கிலத்திலும் உண்டு.
இந்தியாவின் பிற மொழிகளிலும்
ஜெர்மானிய மொழியிலும்
மொழியாக்கம் நடந்துகொண்டிருக்கிறது.

விலை ரூ. 10/-

Printed by
New Shenbagam Offset,
Sivakasi

# உள்ளே ...


| | | | |
|---|---|---|---|
| ☐ | நான் நிற்கும் கன்மலை | ... | 5 |
| ☐ | திருச்சபைச் சீர்திருத்தத்தின் முழக்கங்கள் | ... | 14 |
| 1. | பைபிள் மட்டுமே! | ... | 17 |
| 2. | விசுவாசம் மட்டுமே! | ... | 25 |
| 3. | கிருபை மட்டுமே! | ... | 33 |
| 4. | கிறிஸ்து மட்டுமே! | ... | 41 |
| 5. | தேவ மகிமை மட்டுமே! | ... | 50 |
| ☐ | முடிவுரை | ... | 58 |

**திருச்சபை
அது இருக்கவேண்டிய நிலைக்கு
வந்துசேர வாஞ்சிப்போருக்கு
இறைவாக்கு:**

*"உன்னிடமிருந்து தோன்றியோர்
பண்டை நாளிலிருந்து
பாழடைந்து கிடப்பவற்றைக்
கட்டியெழுப்புவர்;
தலைமுறை தலைமுறையாக இருக்கும்
அடித்தளங்கள்மீது நீ கட்டுவாய்;
தகர்ந்த மதிலைத்
திரும்பக் கட்டுகிறவன் என்றும்,
குடியிருப்பதற்குத்
தெருக்களைச் சீர்ப்படுத்துகிறவன்
என்றும் நீ பெயர் பெறுவாய்!"*

(ஏசாயா 58:12)

# “நான் நிற்கும் கன்மலை”

## “Here I stand!”

திருச்சபைச் சீர்திருத்தத்தின் (Protestant Reformation) 500ஆம் ஆண்டு 2017இல் நிறை வடைகிறது. 1517 அக்டோபர் 31 அன்றுதான் ஜெர்மனியிலுள்ள விட்டன்பர்க் நகரின் சகல பரிசுத்தவான்கள் பேராலயக் கதவில், திருமறைக்குப் புறம்பான நம்பிக்கைகள் மற்றும் செயல்பாடுகளுக்கு எதிரான, தனது 95 நியாயங்களை (Theses) மார்ட்டின் லூத்தர் ஆணியறைந்தார்.

திருச்சபையை அது இருக்கும் நிலையிலிருந்து அது இருக்கவேண்டிய நிலைக்குக் கொண்டு வரவே சீர்திருத்தம். இன்றிருக்கும் சபை அன்றிருந்த சபை அல்ல; இன்றிருக்கும் சபை இருக்க வேண்டிய நிலையிலுள்ள சபையும் அல்ல. சீர்திருத்தம் என்பது எழுப்புதல், மறுமலர்ச்சி, ஆதிநிலையேகுதல் (Revival, Renewal, Restoration) ஆகியவற்றை உள்ளடக்கும். சீர்திருத்தம் என்பது தவறுகளைத் திருத்துவதும், துர்ப்பிரயோகங்களையும் சீர்கேட்டையும் அகற்றுவதுமாகும்.

பைபிளில் சீர்திருத்தச் சம்பவங்கள் பலவற்றைப் பார்க்கிறோம். இதோ சில எடுத்துக்காட்டுகள்: தமது மக்களின் ஆன்மீகத் தரத்தை உயர்த்த தேவன் ***நியாயாதிபதிகளை*** எழுப்பினார். நியாயாதிபதிகளைக் குறித்த சுருக்க வாசகம் இதோ: ''கர்த்தர் தமது மக்களுக்கு நியாயாதிபதிகளை எழும்பப் பண்ணுகையில், கர்த்தர் நியாயாதிபதியுடன் இருந்து, அந்த நியாயாதிபதியின் நாட்களிலெல்லாம் அவர்களது சத்துருக்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்துவருவார்; அவர்கள் தங்களை இறுகப் பிடித்து ஒடுக்குகிறவர்களினால் தவிக்கிறதினால் கர்த்தர் மனமிரங்குவார். நியாயாதிபதி மரணமடைந்த உடனே அவர்கள் திரும்பி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவும், சேவிக்கவும், பணிந்துகொள்ளவும், தங்கள் மூதாதையரைவிடக் கேடாய் நடந்து, தங்கள் முரட்டாட்டமான வழிகளை விடாதிருப்பார்கள்'' (நியாயாதிபதிகள் 2:18,19).

அடுத்து, தேவ பக்தியுள்ள ***இராஜாக்கள்*** மூலம் சீர்திருத்தம் ஏற்பட்டது. அரசனாகும்போது எசேக்கியாவிற்கு வயது 25. ''அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, மோசே உண்டாக்கியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை நொறுக்கிப்போட்டான்; அன்றுவரை இஸ்ரவேலர் அதற்குத் தூபம்காட்டி வந்தார்கள்; அதற்கு நிகுஸ்தான் (வெறும் வெண்கலத் துண்டு) என்று பெயரிட்டான்'' (2 இராஜாக்கள் 18:3-7). சீர்திருத்தத்திற்காய்த் தேவன் பயன்படுத்திய இன்னொரு மன்னன் யோசியா. அவன் எட்டு வயதாயிருக்கும்போதே சிம்மாசனம் ஏறினான். அவனைக் குறித்து 2 இராஜாக்கள் 22இல் வாசிக்கிறோம்.

கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்தம்பண்ணியதே அவனது முதல் வேலை. 8ஆம் வசனத்தில் நம்மை அதிரவைக்கும் ஒரு தகவல் உண்டு: வேதபாரகனை நோக்கிப் பிரதான ஆசாரியன், நான் கர்த்தரின் ஆலயத்தில் நியாயப்பிரமாணப் புத்தகத்தைக் ''கண்டு பிடித்தேன்'' என்றான்! திருச்சபையிலேயே திருமறை தொலைந்துபோவதை நினைத்தும் பார்க்க முடிகிறதா? யோசியாவுக்கு அப்புத்தகம் வாசிக்கப் பட்டபோது அவன் தனது ஆடைகளைக் கிழித்தான்! (வச 11). ''திருமறைக்குத் திரும்பிவர'' (Back to the Bible) மக்களை அறைகூவியழைத்தான்! (வச 13).

அடுத்து, எஸ்றா, நெகேமியா போன்ற ***சீர் திருத்தவாதிகள்*** வந்தனர். ஆலயத்தைத் திரும்பக் கட்ட எஸ்றாவையும், எருசலேமின் சுவர்களைத் திரும்பக் கட்ட நெகேமியாவையும் தேவன் பயன் படுத்தினார். இந்தச் சீர்திருத்தத்தில் இறைவார்த்தை முக்கியப் பங்காற்றிற்று (எஸ்றா 7:10; நெகேமியா 9:3). ஜெபமும் பாவ அறிக்கையும் தொடர்ந்தன. எத்தனையோ இடர்பாடுகள் மற்றும் எதிரிகளின் அச்சுறுத்தல்கள் நடுவில், ''நான் கீழே இறங்கிவரக் கூடாது'' (I cannot come down!) என்று நெகேமியா முழங்கினான் (நெகேமியா 6:3).

அடுத்து, ஆண்டவர் ***தீர்க்கதரிசிகளை*** அனுப் பினார். மனந்திரும்புங்கள், திரும்பிவாருங்கள், சீர்ப்படுத்துங்கள் (Repent, Return, Reform) எனும் சொற்களே அவர்களது செய்திகளில் திரும்பத் திரும்ப ஒலித்தன. எடுத்துக்காட்டாக, ஓசியா 6:1-3,

‘‘கர்த்தரிடம் திரும்புவோம் வாருங்கள் ... அவரே நம்மைக் குணமாக்குவார் ... நமது காயங்களைக் கட்டுவார் ... நம்மை உயிர்ப்பிப்பார் ... எழுப்புவார் ... அவர் மழை போலவும், முன்மாரி பின்மாரி போலவும் நம்மிடம் வருவார்.’’

கடவுளுக்குத் தமது மக்கள் மீதுள்ள கரிசனை யையும், கிறிஸ்துவுக்குத் திருச்சபையின் மீதுள்ள அன்பையும் இறைமக்கள் பலர் இன்றும் தங்கள் இதயங்களில் சுமந்து திரிகின்றனர். தீர்க்கன் எரேமியா போல இவர்கள் தேவனுக்குமுன் மறைவிடங் களில் புலம்பிக்கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு வரும் இறைவாக்கு இதோ: ஏசாயா 58:12, ‘‘உன் னிடமிருந்து தோன்றியோர் பண்டை நாளிலிருந்து பாழடைந்து கிடப்பவற்றைக் கட்டியெழுப்புவர்; தலைமுறை தலைமுறையாக இருக்கும் ***அடித் தளங்கள்மீது*** நீ கட்டுவாய்; தகர்ந்த மதிலைத் திரும்பக் கட்டுகிறவன் (Repairer) என்றும், குடி யிருப்பதற்குத் தெருக்களைச் சீர்ப்படுத்துகிறவன் (Restorer) என்றும் நீ பெயர் பெறுவாய்!’’

நியாயாதிபதிகள், இராஜாக்கள், சீர்திருத்தவாதி கள் மற்றும் தீர்க்கர்கள் மூலம் பலமுறை தேவன் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்திருந்தும், தேவ மக்கள் நடுவில், அதிலும் குறிப்பாகத் தலைவர் களிடையே, அடுத்தடுத்துப் பின்மாற்றம் வந்து கொண்டேயிருந்தது. எனவேதான் பரிசேயரையும் சதுசேயரையும் ‘‘விரியன் பாம்புக் குட்டிகளே’’ என்று திருமுழுக்கினன் யோவான் அழைக்கவேண்டிய தாயிற்று (மத்தேயு 3:7). வேதபாரகர் மற்றும் பரி சேயர்மீது ‘‘உங்களுக்கு ஐயோ’’ என்று திரும்பத்

திரும்ப இயேசுவானவர் கூறவேண்டியதாயிற்று (மத்தேயு 23). தனது இறப்பிற்குப்பின் தேவ மக்களை நாசமாக்கும் "ஓநாய்கள்" வரும் என்று பவுல் முன்னறிவித்தார் (அப்போஸ்தலர் 20:29-32). கள்ளத் தீர்க்கரையும், கள்ளப் போதகரையும் "நாய்கள், பன்றிகள்" என்றழைத்தார் அப்போஸ்தலன் பேதுரு (2 பேதுரு 2:1,2,22).

சபைச் சரித்திரம் எப்படியிருந்தது எனக் கவனிக்க இது நம்மை நடத்துகிறது. முதல் நூற்றாண்டிற்கும் இன்றைய நாளுக்கும் இடைப்பட்ட ஆண்டுகளை எட்டு காலங்களாய்ப் பிரிக்கலாம் —

*1) அப்போஸ்தலத் திருச்சபை*

*(கி.பி. 30 முதல் கி.பி. 100 வரை)*

பெந்தெகொஸ்தே நாள் முதல் அப்போஸ்தலன் யோவானது மரணம் வரையுள்ள ஆதி அப்போஸ்தலரின் காலமிது.

*2) துன்புறுத்தப்பட்டத் திருச்சபை*

*(கி.பி. 100 முதல் கி.பி. 313 வரை)*

கி.பி. 313இல் ரோமச் சக்கரவர்த்தி கான்ஸ்டன்டைன் கிறிஸ்தவத்தைத் தழுவினார். கிறிஸ்தவம் ரோமப் பேரரசின் மார்க்கமாயிற்று. 4 சதவீதத்தினர் என்றிருந்த கிறிஸ்தவர் திடீரென 80 சதவீதத்தினராய்ப் பெருகினர். மனமாற்றம் இல்லாத மதமாற்றம்! "நோவா காலத்துக்கடுத்த படுமோசமான பேரழிவு" இதுதான் என்கிறார் ஒரு தேவ மனிதன்! மகாத்மா காந்தியோ, டாக்டர் அம்பேத்காரோ கிறிஸ்தவராகியிருந்தால் இந்தியாவில் கிறிஸ்தவர் எண்ணிக்கை எவ்வளவாய்ப் பெருகி

யிருக்கும்! இந்தியத் திருச்சபைகளில் பெயர்க் கிறிஸ்தவமும் சடங்காச்சார மார்க்கமும் இமயத்தை எட்டியிருக்கும்!

*3) இராஜாங்கத் திருச்சபை*

*(கி.பி. 313 முதல் கி.பி. 476 வரை)*

இக்காலத்தில்தான் அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம், அத்தனேசியஸ் விசுவாசப் பிரமாணம், நைசியன் விசுவாசப் பிரமாணம் ஆகியவை எழுதப்பட்டன.

*4) மத்தியக் காலத் திருச்சபை*

*(கி.பி. 476 முதல் கி.பி. 1517 வரை)*

கி.பி. 476இல் இருண்ட காலத்திற்குள் (Dark Ages) திருச்சபை நுழைந்தது.

*5) சீர்திருத்தத் திருச்சபை*

*(கி.பி. 1517 முதல் கி.பி. 1648 வரை)*

ஜெர்மனியிலுள்ள விட்டன்பர்க் நகர்ப் பேராலயக் கதவில் மார்ட்டின் லூத்தர் தனது 95 நியாயங்களை ஆணியறைந்த 1517 அக்டோபர் 31 அன்று இக்காலம் துவங்கியது. ஐரோப்பாவின் சன்மார்க்க மற்றும் அரசியல் கலாச்சாரத்தில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

*6) சிந்தனைக் காலத் திருச்சபை*

*(கி.பி. 1648 முதல் கி.பி. 1789 வரை)*

இது சிந்தனையாளர்களின் காலம். சுவிசேஷத்தின் விசுவாசத்தை விளக்க ஜான் வெஸ்லி, ஜார்ஜ் விட்பீல்டு, யோனத்தான் எட்வர்ட்ஸ் மற்றும் ஜார்ஜ் ஃபாக்ஸ் போன்றோரைத் தேவன் பயன்படுத்தினார்.

*7) நவீன காலத் திருச்சபை*

*(கி.பி. 1789 முதல் கி.பி. 1970 வரை)*

C.H. ஸ்பர்ஜன், D.L. மூடி, பில்லி கிரஹாம் போன்ற தேவ மனிதரின் ஊழியங்கள் தாக்கத்தை ஏற்படுத்திய காலம். பிரபலமான வேல்ஸ் நாட்டு எழுப்புதல் 1904இல் பிறந்தது.

*8) இன்றையத் திருச்சபை*

*(கி.பி. 1970 முதல் இன்று வரை)*

இது எப்படியிருக்கிறதென நாமறிவோம்!

திருச்சபைச் சீர்திருத்தம் (Protestant Reformation) குறித்துப் பேசும்போது தேவனால் அசாதாரணமாய்ப் பயன்படுத்தப்பட்ட சில நபர்களை நாம் நன்றியுணர் வுடன் நினைவுகூரவேண்டும் —

*1) ஜான் ஹஸ் (1369-1415)*

இவர் மிகவும் முந்திய சீர்திருத்தவாதிகளில் ஒருவர். இவரது விசுவாசத்திற்காய் இவர் தீக்கிரையானார்.

*2) மார்ட்டின் லூத்தர் (1483-1546)*

இவர் மிகவும் பிரபலமான சீர்திருத்தவாதி. துறவியாயிருந்த இவர் ஓர் இறையியல் பேராசிரியராயிருந்தார். பாவ மன்னிப்புச் சீட்டு விற்கும் பழக்கம் (Indulgence) கொண்டிருந்த ரோமன் கத்தோலிக்க உபதேசத்திற்கு எதிராய் இவர் குரல் எழுப்பினார். *"விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்"* என்ற திருவசனமே இவரது முழக்க வாசகம் (ரோமர் 1:16,17). தனது வாதத்தை 95 நியாயங்களாய் (Theses) எழுதி வெளியிட்டார்;

அவை நகலெடுக்கப்பட்டு, உலகெங்கும் பெருமளவில் வினியோகமாயின. தனது விசுவாசத்திற்காய்ப் பதில் சொல்ல நின்ற வேளையில் லூத்தர் கூறியது: "நான் இதில்தான் நிற்பேன்! தேவன் எனக்கு உதவுவார்! வேறெதையும் என்னால் செய்ய முடியாது!" (Here I stand! God help me! I can do no other!)

*3) வில்லியம் டின்டேல் (1484-1536)*

பழைய ஏற்பாட்டின் பாதிப் பகுதியையும், புதிய ஏற்பாடு முழுவதையும் இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இவரது மொழியாக்கத்தையே உலகப் புகழ்பெற்ற King James Version (KJV) வெகுவாய்ப் பயன்படுத்தியது. இவர் 1536இல் தீக்கிரையாக்கப்படுமுன், "ஆண்டவரே, இங்கிலாந்து மன்னனின் கண்களைத் திறந்தருளும்" என இறுதியாய் ஜெபித்தார். இவரது இரத்தசாட்சி ஜெபம் கேட்கப்பட்டு, ஆங்கில மொழியாக்கம் ஒன்றிற்கு மன்னன் உத்தரவிட்டார்.

*4) தாமஸ் கிரேன்மர் (1489-1556)*

சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும்படி இங்கிலாந்து நாட்டுத் திருச்சபையை (Church of England) இவர் ஊக்குவித்தார். ஆங்கிலிக்கன் சபைகளில் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் *"பொது ஜெபப் புத்தகம்"* (Common Book of Prayer) எழுதியது இவரே. (எனது தாயாரின் வற்புறுத்தலினால் இப்புத்தகத்திலிருந்து பல சுருக்க ஜெபங்களை வாலிபப் பருவத்தில் நான் மனனம் செய்திருக்கிறேன்.)

*5) ஜான் கால்வின் (1509-1564)*

இவர் வேத வியாக்கியானங்கள் பல எழுதினார். இவரது இறையியல் தத்துவமே கால்வின் கொள்கைக்கு (Calvinism) அடிகோலிற்று.

பிரிய வாசகரே, ''நான் இதில்தான் நிற்பேன்'' (Here I stand!) என்று வீர முழக்கமிட்டுப் பின் வாங்க மறுத்த இவர்கள் மற்றும் இவர்கள் போன்ற சீர்திருத்தவாதிகளுக்காய் நீங்கள் இருக்குமிடத்திலேயே ஒரு நிமிடம் எழுந்து நின்று தேவனைத் துதிப்பீர்களா?




*திருச்சபைச் சீர்திருத்தவாதிகள்*

*இரத்த சாட்சிக் கூட்டம் சத்தியப் பாதையில்*
*நித்தம் தம்மைத் தத்தம் செய்து வீர சேவையில்*
*ஜீவன் சுகம் பெலன் யாவையும் ஈந்ததால்*
*சுத்த சுவிசேஷம் ஓங்குதே!*

# திருச்சபைச் சீர்திருத்தத்தின் முழக்கங்கள்

சீர்திருத்தவாதிகளின் இறையியல் கோட்பாடுகளின் சுருக்கம் லத்தீன் மொழியிலும், ஆங்கிலத்திலும், தமிழிலும் இதோ —

1. *"Sola Scriptura"* (Scripture alone!)
   பைபிள் மட்டுமே!
2. *"Sola Fide"* (Faith alone!)
   விசுவாசம் மட்டுமே!
3. *"Sola Gratia"* (Grace alone!)
   கிருபை மட்டுமே!
4. *"Solo Christo"* (Christ alone!)
   கிறிஸ்து மட்டுமே!
5. *"Soli Deo Gloria"* (Glory of God alone!)
   தேவ மகிமை மட்டுமே!


பல்வேறு சபைகளிலும் கிறிஸ்தவச் சங்கங்களிலுமிருந்து எனக்குக் கிடைத்த ஏறத்தாழ 40 நாட்

காட்டிகளில் ஒன்றுகூட இவ்வாண்டை (2017) திருச்சபைச் சீர்திருத்தத்தின் 500ஆம் ஆண்டு எனக் குறிப்பிடவில்லை. சீர்திருத்த நாளாகிய அக்டோபர் 31ஐக்கூட அவ்விதம் குறிப்பிடவில்லை. சீர்திருத் தத்தின் மகத்தான சத்தியங்களை நாம் வெகுவாய் மறந்துவிட்டோம் என்றே எண்ணுகிறேன். சபைச் சீர்திருத்தத்தின் வேர்களைப்பற்றி இன்றையத் தலை முறையினருக்கு எதுவும் தெரியாதிருப்பது ஆச்சரிய மல்லவே! இந்த 2017ஆம் ஆண்டு நாட்காட்டியைச் சீர்திருத்தத்தின் கருப்பொருளில் வெளியிட்ட ஒரே நிறுவனம் Back to the Bible (சத்திய வசனம்) மட் டுமே. தனது பெயருக்கேற்ப இயங்கும் இவ்வூழியத் திற்கு எனது பாராட்டுக்கள்! *"நமது விசுவாசத்தை வரையறுக்கும் தருணம்"* (Defining Moments of our Faith) என்ற தலைப்பில் இந்த ஐந்து முழக்க வாசகங்களுடன் தங்கள் நாட்காட்டியை வெளியிட் டுள்ளனர். சீர்திருத்தவாதிகள் சம்பந்தப்பட்ட ஆல யங்கள் அல்லது இடங்களின் படங்கள் ஒவ்வொரு மாதப் பக்கத்திலும் அச்சிடப்பட்டுள்ளன.

சீர்திருத்தத்தைத் தொடர்ந்து பல சபைப் பிரிவுகள் தோன்றின. லுத்தரன், பிரஸ்பிட்டேரியன், கான்கிரிகேஷனலிஸ்ட்ஸ், மெதடிஸ்ட், பாப்திஸ்து போன்றவை அவைகளில் சில. பெந்தெகொஸ்தே சபை பின்னர் தோன்றிற்று. ஒவ்வொரு சபைப் பிரிவிற்கும் பலங்களும் பலக்குறைவுகளும் உண்டு. திருமறையின் அனைத்துச் சத்தியங்களையும் பூரண மாய் விளங்கிக்கொண்ட சபைப்பிரிவு எதுவுமில்லை. எனவே பெருமையடிக்க எவருக்கும் இடமில்லை.

இச்சபைப்பிரிவுகளுக்கிடையே சிறு சிறு வேறு பாடுகளிருந்தாலும் அடிப்படைச் சத்தியங்களை வரையறுப்பது இந்த ஐந்து முழக்க வாசகங்களே.

திருச்சபைச் சீர்திருத்தத்தின் இம்முக்கிய ஐந்து கோட்பாட்டு முழக்கங்களைத் திருமறையின் வெளிச் சத்தில் அடுத்து வரும் பக்கங்களில் படித்துக் கிறிஸ் தவர்கள் மற்றும் சபைகள் தங்கள் வாழ்க்கையில் அவற்றை அப்பியாசிப்பது எப்படியெனக் கவனிப் போம்.



*1517 அக்டோபர் 31 அன்று ஜெர்மனியிலுள்ள விட்டன்பர்க் நகரின் பேராலயக் கதவில் தனது 95 நியாயங்களை ஆணியறையும் மார்ட்டின் லூத்தர்*

# 1. பைபிள் மட்டுமே!

*(Bible alone!)*

திருமறையானது தேவனது அகத்தூண்டுதலான வார்த்தை; அது மனிதனது கற்பனையின் விளை வல்ல. 2 பேதுரு 1:20,21, "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளை உடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனிதருடைய சித்தத்தினால் உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனிதர் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேசினர்." ஆம், மனிதனது கற்பனையினால் அல்ல, தேவனது அகத்தூண்டுதலினாலேயே பைபிள் பிறந்தது. இது நாம் "முந்தி" அறியவேண்டியது (வச 20).

பைபிளில் தேவனது வார்த்தை "அடங்கியிருக்கிறது" (The Bible *contains* the Word of God) என்று சொல்லும் இதவாத இறையியலர் நமது பிரசங்கபீடங்களை ஆக்கிரமித்துள்ளனர். இக் கருத்தை நாம் முழுமூச்சாய் எதிர்க்கிறோம். பைபிளே தேவனது வார்த்தையாய் "இருக்கிறது" (The Bible

*is* the Word of God). பக்தியுள்ளோரோ பக்தியற் றோரோ அவர்கள் பேசியவைகளை வேதாகம ஆக்கி யோன்களால் எழுத வைத்தது தேவனே. பரிசுத்த ஆவியானவரே பரிசுத்த ஆகமங்களின் ஆசிரியரா னதால் திருமறை முழுவதும் திருவார்த்தைதான். இதவாதிகள் (liberals) மற்றும் நவீனவாதிகளை (modernists) நமது பிரசங்கப்பீடங்களிலிருந்து துரத்தியடிக்கும்படி அனைத்துச் சபை விசுவாசிகளை அழைக்கிறேன்.

பைபிள் *குறைவற்றது* (inerrant). சங்கீதம் 19:7, “கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது.” பைபிள் *தவறாதது* (infallible). யோவான் 10:35, “வேத வாக்கியம் தவறாதிருக்கிறது.” பைபிள் *அழிக்க முடியாதது* (indestructible). மாற்கு 13:31, “வானமும் பூமியும் ஒழிந்துபோகும்; என் வார்த்தைகளோ ஒழிந்துபோவ தில்லை.”

பைபிள் நமக்குப் *போதுமானது* (sufficient). எனவேதான் “எழுதப்பட்டதற்கு மிஞ்சி” எண்ணவும் கூடாதென அப்போஸ்தலர் அடித்துக் கூறினர் (1 கொரிந்தியர் 4:6). திருவசனத்திற்குள் நம்மை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்பதற்குத் தன்னை யும் அப்பொல்லோவையும் அப்போஸ்தலன் பவுல் முன்மாதிரியாய் நிறுத்துகிறார். வெளிப்படுத்தல் புத்தகத்தை அப்போஸ்தலன் யோவான் எப்படி நிறைவு செய்கிறார் பாருங்கள்: “இத்தீர்க்கதரிசனப் புத்தகத்தின் வசனங்களோடு ஒருவன் எதையாவது கூட்டினால், இப்புத்தகத்தில் எழுதியிருக்கும் வாதை களைத் தேவன் அவன்மேல் கூட்டுவார்; இவை களிலிருந்து ஒருவன் எதையாவது எடுத்துப்போட்

டால், ஜீவப் புத்தகத்திலிருந்து அவனது பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார்'' (வெளிப்படுத்தல் 22:18,19). வெளிப்படுத்தல் புத்தகத்தையே இவ் வசனம் குறிப்பிட்டாலும், முழு வேதத்திற்கும் இத் தத்துவம் பொருந்தும். யோவான் 20:30ஐச் சுட்டிக் காட்டி, இயேசுவின் எழுதப்படாத செயல்பாடுகள் இன்னும் எவ்வளவோ உண்டே என்று வாதாடி, வேதத்திற்குக் கூடுதலான வெளிப்பாடுகள் மற்றும் அனுபவங்களைச் சில பிரசங்கிமார் நியாயப்படுத்து கிறார்கள். ஆனால் எழுதப்பட்டவைகளே ''நித்திய ஜீவனுக்குப்'' போதுமானவை என்று 31ஆம் வசனமே சொல்வதைக் கவனித்தீர்களா?

திருமறையுடன் பாரம்பரியங்களையும் முக்கிய மானவையென்று பல திருச்சபைகள் வைத்துக் கொள்ளுகின்றன. இப்போக்கைத் தமது காலத்தில் இயேசு வெகுவாய்க் கண்டித்தார்: மாற்கு 7:9,13, ''உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படித் தேவனது கட்டளைகளைத் திறமையாய்ப் புறக் கணித்துவிட்டீர்கள் ... உங்கள் பாரம்பரியத்தினால் தேவ வசனத்தை அவமாக்குகிறீர்கள். இது போலவே மற்றும் அநேகக் காரியங்களையும் செய்கிறீர்கள்.'' தேவன் வெளிப்படுத்திய சத்தியத்தைவிடத் தனது சொந்தப் பாரம்பரியத்தை விழுந்துபோன மனிதன் எப்பொழுதும் நாடுவான். தேவன் என்ன சொல்லு கிறார் என்பதைவிட அவன் என்ன நினைக்கிறான் என்பதே அவனுக்கு முக்கியமாய்த் தோன்றுகிறது.

17ஆம் நூற்றாண்டின் எழுப்புதல் வீரர்களில் ஒருவராகிய ஜான் வெஸ்லி அழுத்திச் சொன்னது: ''திருச்சபைதான் திருவசனத்தால் நியாயந்தீர்க்கப்

படவேண்டும்; திருவசனமானது திருச்சபையால் நியாயந்தீர்க்கப்படக்கூடாது." பிரியமானவரே, ஆதியிலே இருந்தது வார்த்தை, சபையல்ல!

*"மறைக்கப்பட்ட ஆகமங்களைப்"* பற்றி (Apocrypha) என்ன? கி.மு. 200க்கும் கி.பி. 100க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்நூல்கள் எழுதப்பட்டன. திருமறை என்று எவராலும் எப்பொழுதும் இவை ஏற்கப்படவில்லை. ஆனால் இறந்தோருக்காய் ஜெபித்தல் (உத்தரிக்கும் ஸ்தலம்), இறந்தோரிடம் வேண்டுதல், நற்செயல்கள் மூலம் பாவ மன்னிப்படைதல் போன்ற தங்கள் தத்துவங்களை நிலை நாட்டிச் சீர்திருத்தவாதிகளை எதிர்க்கவேண்டும் எனும் எண்ணத்துடன் ரோமன் கத்தோலிக்கர் இந்த ஏழு நூல்களை 1546இல் திருமறையுடன் பழைய ஏற்பாட்டில் இணைத்தனர். ஆனால் பின்னர் ரோமன் கத்தோலிக்கரால் ஏற்கப்பட்ட புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் ஒன்றிலும் "மறைக்கப்பட்ட ஆகமங்களிலிருந்து" எதுவும் எடுத்தாளப்படவிடல்லை.

பைபிள் மட்டுமே என்று நாம் சொல்லும்போது, கிறிஸ்தவரல்லாத புலவர்கள் மற்றும் நாடக ஆசிரியர்களின் படைப்புகளை நாம் எடுத்தாளலாமா? இவர்களது படைப்புகளில் எவ்வளவுதான் நீதி நெறிகள் சொல்லப்பட்டிருந்தாலும், அவை வெறும் "அறிவு" (knowledge) தருமே தவிர திருவிவிலியத்தைப் போல ஆத்தும இரட்சிப்புக்கேதுவான "ஞானம்" (wisdom) தராது (2 தீமோத்தேயு 3:15). கிறிஸ்தவரல்லாதோரின் எழுத்துக்களிலிருந்து அவ்வப்போது மேற்கோள் காட்டுவது தவறல்ல. அத்தேனே நகரி

லுள்ள மார்ஸ் மேடையிலிருந்து சிலை வணக்கத் தாருக்குச் சொற்பொழிவாற்றும்போது அப்போஸ் தலன் பவுல் சொன்னது: "நாம் தேவனுடைய சந்த தியார் என்று உங்கள் புலவர்களிலும் சிலர் சொல்லி யிருக்கிறார்கள்" (அப்போஸ்தலர் 17:28).

"பைபிள் என்ன சொல்லுகிறது" என்பதே நமது முழு வாழ்க்கையின் கோட்பாடாய் இருக்கவேண் டும். இச்சத்தியத்தை வலியுறுத்தும் திருவசனங் களைப் பாருங்கள்: மத்தேயு 21:42; யோவான் 7:38; ரோமர் 4:3; 10:8; 11:2; கலாத்தியர் 4:30; 1 தீமோத் தேயு 5:18; யாக்கோபு 4:5. இறைவார்த்தையாகிய பைபிள்மீது நமது விசுவாசம் அடித்தளப்படாதிருந் தால் கிறிஸ்து மரித்தார், உயிர்த்தார் என்பதெல்லாம் நமக்கு எப்படித் தெரியும்? சிலுவையில் கிறிஸ்து தொங்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஏதும் நம்மிடம் உண்டோ? இஸ்ரவேல் நாட்டில் ஒன் றுக்கும் மேற்பட்ட காலிக் கல்லறைகள் உண்டே, இயேசுவை அடக்கம்பண்ணிய கல்லறை எதுவோ? பைபிள் என்ன சொல்லுகிறது என்பதிலேயே சிலுவை மரணமும், உயிர்த்தெழுதலும் பற்றிய நமது விசு வாசம் சார்ந்திருக்கிறது. கொரிந்து சபையினருக்கு இதைப் பவுல் சரியாய் எழுதினார்: 1 கொரிந்தியர் 15:3,4, "கிறிஸ்துவானவர் *வேதவாக்கியங்களின்படி* நமது பாவங்களுக்காய் மரித்து, அடக்கம் பண்ணப் பட்டு, *வேதவாக்கியங்களின்படி* மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்." அவர்களது "இரட்சிப்புக்குக்" காரணமாயிருந்த இதிலேயே அவர்கள் "நிலைத் திருக்க" வேண்டுமென அறிவுறுத்தினார் (வச 1,2). எனவேதான் திருவசனத்தையே பிசாசு பிரதானமாய்த்

தாக்குவான். “தேவன் சொன்னதுண்டோ?'' என்ற சந்தேகக் கேள்வியை ஏவாளின் மனதில் அவன் எழுப்பினான் அல்லவா? (ஆதியாகமம் 3:1).

ஒரு முறையாவது விவிலியத்தை முழுவதும் வாசித்துள்ள கிறிஸ்தவர் வெகு சிலர். பிரியமான வரே, விவிலியத்தின் 66 புத்தகங்கள் எதிலும் தேவையற்ற வசனப் பகுதிகளே கிடையாது. வம்ச வரலாற்றுப் பகுதிகளிலிருந்தும் கற்கவேண்டியவை உண்டு! ''வேத வாக்கியங்கள் ***எல்லாம்*** பயனுள் ளவை'' எனத் தீமோத்தேயுவுக்குப் பவுல் திட்டமாய் எழுதினார் (2 தீமோத்தேயு 3:16). கிறிஸ்தவ வாழ் வில் இளமையிலிருந்து முதிர்ச்சிக்கு வளர்வது திரு வசனத்தின் மூலமாகத்தான் (வச 15,17). வேதத்தின் ஒரு சில பகுதிகளைத் தியானிக்கத் தவறுவது நமக் குத்தான் பாதகம். “உபதேசம்'' மூலமாகவும் ''உதார ணம்'' மூலமாகவும் தேவன் தமது ஞானத்தைத் திருவசனத்தில் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் (ஏசாயா 8:20). அவரது சிந்தையைப் புரிந்துகொள்ள வேறெதுவும் நமக்குத் தேவையில்லை (வச 19). இறந்தோரிடம் வேண்டுவது இங்கு திட்டமாய்க் கண்டிக்கப்பட்டுள்ளது (வச 19). முழு வேதத்தையும் கிரமமாய் வாசித்து முடிக்க வேதாகம அட்டவணை ஒன்றைப் பயன்படுத்துங்கள். (ஈராண்டுக் காலத்தில் வேதம் முழுவதையும் வாசித்து முடிக்கவும், ஆண் டுக்கு 100 வசனங்களை மனனம் செய்யவும் உதவும் ஒரு திட்டம் *பைபிள் அட்டவணை* எனும் எனது 60-பக்க நூலில் உண்டு.)

ஓர் அனுபவம் எவ்வளவு ஆன்மீகத் தோற்றம் கொண்டிருந்தாலும் அதின் அடிப்படையில் நாம்

இதுவே சத்தியம் என்று சொல்லிவிட முடியாது. அனுபவத்திலிருந்து சத்தியம் என்பதல்ல; மாறாக, எந்த அனுபவத்திற்கும் சத்தியமே உரைகல். திருமறையில் நேரடியாக, தெளிவாக, போதிக்கப்படாத எந்த அனுபவத்தையும் அங்கிகரிக்க நாம் கடமைப் பட்டவர்களல்ல. *Sola Scriptura! பைபிள் மட்டுமே!*

விவிலியம் மொழியாக்கப்படாத ஏறத்தாழ 200 இந்திய மொழிகளை இங்கு நினைவுகூருவோம். நமது தாய் மொழியிலேயே, பல்வேறு மொழியாக்கங்களில், பரிசுத்த வேதம் நமது கையிலிருப்பது நமது பொறுப்பைக் கூட்டுகிறது (லூக்கா 12:48). சாமானியர்களும் வாசித்துப் புரிந்துகொள்வதற்காய்ப் பைபிளை லத்தீன் மொழியிலிருந்து ஜெர்மானிய மொழிக்கு மொழியாக்கம் செய்த மார்ட்டின் லூத்தருக்காய்த் தேவனைத் துதிப்போம். ஏராளம் எதிர்ப்புகளின் நடுவில் அவர் இதைச் செய்தார்.

**பாடுங்கள் —**

*சத்திய வேதம் பக்தரின் கீதம்*
*சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்*
*உத்தம மார்க்கம் காட்டும்*

*எத்தனை துன்பம் துயரம் வந்தும்*
*பக்தனைத் தேற்றிடும் ஔஷதம்*

*நித்தம் விரும்பும் கர்த்தர் வசனம்*
*சுத்தப் பசும்பொன் தெளிந்திடும் தேன்*
*இதயம் மகிழும் கண்கள் தெளியும்*
*இருண்ட ஆத்மா உயிரடையும்*

பேதைகளிடம் ஞானம் அருளும்
வேதப் புத்தகம் மேன்மை தரும்
இரவும் பகலும் இதன் தியானம்
இனிமை தங்கும் தனிமையிலும்

வேதப் பிரியர் தேவப் புதல்வர்
சேதமடையா நடந்திடுவார்
இலைகள் உதிரா மரங்கள் போல
இவர்கள் நல்ல கனி தருவார்

உள்ளம் உதிக்கும் உறுதி அளிக்கும்
கள்ளம் கபடெல்லாம் அகற்றும்
கடிந்து கொள்ளும் கறைகள் போக்கும்
கனமடைய வழி நடத்தும்

கர்த்தர் வசனம் வல்ல சம்மட்டி
கன்மலையையும் நொறுக்கிடுமே
இதய நினைவை வகையாய் அறுக்கும்
இருபுறமும் கருக்குள்ளதே

வானம் அகலும் பூமி அழியும்
வேத வசனம் நிலைத்திருக்கும்
பரமன் வேதம் எனது செல்வம்
பரவசம் நிதம் அருளும்

(சகோதரி சாராள் நவரோஜி, 1938-2014)

## 2. விசுவாசம் மட்டுமே!

*(Faith alone!)*

மார்ட்டின் லூத்தரின் சிந்தையைக் கிளறி விட்டுக், கொழுந்துவிட்டு எரியச் செய்த திரு வார்த்தை, ரோமர் 1:16,17, "***விசுவாசிக்கிறவன்*** எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்குக் கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவ வல்லமையாயிருக் கிறது. ***விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்*** என்று எழுதியிருக்கிறபடி, ***விசுவாசத்தினால்*** உண் டாகும் தேவ நீதி ***விசுவாசத்திற்கென்று*** அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது." "*விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்*" என்பது வேதத்தில் எங்கோ ஒரு மூலையிலுள்ளதல்ல. திரு மறையில் 4 இடங்களில் அது வருகிறது: ஆபகூக் 2:4; கலாத்தியர் 3:11; ரோமர் 1:17; எபிரெயர் 10:38. இதின் கருத்து என்னவெனில், மார்க்கத்தின் எவ்விதக் கிரியைகளினாலும் அல்ல, கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம்

என்பதே. அப்போஸ்தலன் பவுல் இதனை எபேசியர் 2:8,9இல் அழுத்தந்திருத்தமாய்க் கூறுகிறார்: "கிருபையினாலே ***விசுவாசத்தைக்*** கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானது ***அல்ல***; இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமையடிக்காதபடி இது கிரியைகளினால் உண்டானது ***அல்ல***." "உங்களால்" உண்டானது அல்ல — நாம் யாராய் இருக்கிறோம் என்பதைப் பொருத்ததல்ல. "கிரியைகளினால்" உண்டானது அல்ல — நாம் யாது செய்கிறோம் என்பதைப் பொருத்ததல்ல.

இங்குதான் பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்குமுள்ள அடிப்படை வேற்றுமை தெளிவாகிறது. பழைய உடன்படிக்கை சொல்லுவதாவது: உபாகமம் 6:25, "நமது தேவனாகிய கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடியே நாம் அவர் சமூகத்தில் இந்த எல்லாக் கட்டளைகளின்படியும் ***செய்யக்*** கவனமாயிருந்தால், நமக்கு நீதியாயிருக்கும்." மாறாக, புதிய உடன்படிக்கை சொல்லுவதோ: ரோமர் 3:21,22, "இப்பொழுதோ, நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவ நீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது ... அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் ***விசுவாசத்தினாலே*** பலிக்கும் தேவ நீதியே. ***விசுவாசிக்கிற*** எவர்களுக்குள்ளும், எவர்கள்மேலும் அது பலிக்கும்!"

விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளவேண்டுமெனப் போதித்தவர்களால் தொந்தரவு செய்யப்பட்ட கலாத்திய நாட்டு விசுவாசிகளுக்குப் பவுல் இச்சத்தியத்தை வலியுறுத்துகிறார்: கலாத்தியர் 2:15,16, "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் மனிதன்

நீதிமானாக்கப்படுவது ***இல்லை*** என்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் ***அல்ல,*** கிறிஸ்துவைப்பற்றும் ***விசுவாசத்தினாலே*** நீதி மான்களாக்கப்படும்படிக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம். நியாயப்பிரமாணத்தின் கிரியை களினால் எந்த மனிதனும் நீதிமானாக்கப்படுவது ***இல்லையே!''*** இந்த நிருபத்தில் ''விசுவாசம்'' எனும் சொல் திரும்பத் திரும்ப வருவது உங்களை மெய்சிலிர்க்கச் செய்யும் (கலாத்தியர் 2:20; 3:2,5, 6,7,8,9,11,12,14,22,23,24,25, ...).

நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு 430 ஆண்டுகட்கு ***முன்னர்*** ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டான் (கலாத்தியர் 3:17). நியாயப் பிரமாணம் பின்னர் கூட்டப்பட்ட ஒன்று; அதுவும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே: ''வாக்குத் தத்தத்தைப் பெற்ற சந்ததி ***வருமளவும்*** அது அக் கிரமங்களின் பொருட்டு கூட்டப்பட்டது'' (வச 19). அந்தச் ''சந்ததி'' அல்லது ''வித்து'' என்பது கிறிஸ் துவையே குறிக்கும். ''விருத்தசேதனம் உள்ளவனா யிருந்தபோது அல்ல, விருத்தசேதனம் இல்லாதவ னாயிருந்தபோதுதான்'' ஆபிரகாமுக்கு விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டது (ரோமர் 4:9,10). ஆம், விருத்தசேதனத்தினாலோ, நியாயப்பிரமாணத்தி னாலோ அல்ல, ***விசுவாசத்தினாலேயே*** ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டான். இது இன்று நமக்குப் போதிப் பது யாது? குழந்தை ஞானஸ்நானமோ, வயதுவந் தோர் ஞானஸ்நானமோ, தெளிப்பு ஞானஸ்நானமோ, முழுக்கு ஞானஸ்நானமோ, நம்மை இரட்சிப்ப தில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நீங்கள்

சொந்த இரட்சகராகத் தனிப்பட்டு விசுவாசிக்கும் நொடியிலேயே தேவனுடைய பிள்ளையாகிறீர்கள் (யோவான் 1:12; ரோமர் 10:9-11). அடுத்து, கீழ்ப் படிதலின் முதல்படியாகத் திருமுழுக்கு தொடர்கிறது (அப்போஸ்தலர் 8:36-38; 10:47,48; 16:30-33).

கிறிஸ்துவின்மீது ***விசுவாசம்*** என்பது மட்டுமே இரட்சிப்புக்கு ஒரே நிபந்தனை. அபாரமான இரு எடுத்துக்காட்டுகள் இதோ: (1) காசா வனாந்தரத்தில் எத்தியோப்பிய மந்திரி ஒருவருக்குச் சுவிசேஷகன் பிலிப்பு இயேசுவைப் பிரசங்கித்தார். வழியில் தண் ணீரைக் கண்டவுடன் பிலிப்புவிடம் மந்திரி கேட் டது: "இதோ, தண்ணீர் இருக்கிறதே; நான் ஞானஸ் நானம் பெறத் தடையென்ன?" (அப்போஸ்தலர் 8:35,36). அவனுக்குக் கிடைத்த உடனடிப் பதிலை நன்கு கவனியுங்கள்: "நீர் முழு இருதயத்தோடும் ***விசுவாசித்தால்*** தடையில்லை!" (வச 37). (2) பிலிப்பிய சிறையதிகாரி பவுலையும் சீலாவையும் பார்த்து, "ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். அவ ருக்கும் வந்த உடனடிப் பதில்: "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ***விசுவாசி;*** அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப்போஸ்தலர் 16:30,31). அவன் தனது குடும்பத்தாருடன் கிறிஸ் துவை விசுவாசித்தான். "நள்ளிரவில் அந்நேரத்தில் தானே" அவர்கள் திருமுழுக்கு பெற்றனர் (வச 33). இந்த இரு நிகழ்வுகளிலும் "இரட்சிக்கப்படுவது எப்படி" என வினவியவருக்கு "இரட்சிப்பின் ஏழு படிகள்" என்று பதில் தரப்படவில்லை! ஏழு படிகள் ஏறினால் இளைப்புதான், இரட்சிப்பு எங்கே?

சீடத்துவத்தை இரட்சிப்புக்கு நிபந்தனையாய் முன்வைக்கும் உபதேசங்களைக் குறித்து எச்சரிக்கை! திருமுழுக்கு பெறுவதற்கு ஆன்மீகத்தில் ஓரளவு வளரவேண்டுமென இவ்வுபதேசம் போதிக்கிறது. ''சீடன்'' என்றால் ''மாணவன்'' என்றே பொருள். நீங்கள் பாலர் பள்ளியிலிருந்தாலும், முதுநிலைப் பட்ட வகுப்பிலிருந்தாலும் மாணவர்தான். மாணவ ராய்ச் சேர்ந்த பின்னர்தான் அறிவில் வளருகிறீர்கள். அப்படியே, இயேசுவை முழு இருதயத்தோடு விசு வாசிக்கும் நொடியில்தானே "சீடராய்ச்" சேர்ந்துவிடு கிறீர்கள் (மத்தேயு 28:19). அடுத்துதான் தொடர்ந்த உபதேசத்தினால் வளர்ச்சி (வச 20). "ஏறுதல், இறங் குதல்" போன்ற சுய முயற்சிகளினால் அல்ல, நாவின் அறிக்கையினாலும் இதய விசுவாசத்தினாலுமே இரட்சிக்கப்படுகிறோம் (ரோமர் 10:4-10). திரு முழுக்கு பெறுமுன் ஆதிவாசிப் பெண்கள் தங்கள் கைகளிலுள்ள வளையல்களை உடைக்கவேண்டு மென்று வற்புறுத்தப்பட்டதால், ஒரு மிஷனரி இயக் கம் ஓர் ஆதிவாசி இனத்தையே இழந்தது. ஐயகோ, புதிய ஏற்பாட்டுச் சத்தியங்களைப் புரிந்துகொள்வ தில் எவ்வளவு தவறிவிட்டோம்! (அப்போஸ்தலர் 15:28,29). (தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள *விசு வாச வாழ்வு* எனும் எனது 128 பக்க நூலை வாசி யுங்கள்.)

கிறிஸ்தவ வாழ்வில் எல்லாமே ***விசுவாசத் தைச்*** சார்ந்ததுதான். ''விசுவாசத்தைத் துவக்குகிற வர், முடிக்கிறவர்'' என்பவரே நமது தலைவர் (எபி ரெயர் 12:1,2). ''விசுவாச வீட்டார்'' என்பதே திருச் சபை எனும் நமது சமுதாயம் (கலாத்தியர் 6:10). ''விசுவாசத்தின் ஆவி'' என்பதே நமது உயிர் மூச்சு

(2 கொரிந்தியர் 4:13). ''விசுவாச வார்த்தை'' என்பதே நமது செய்தி (ரோமர் 10:8). ''விசுவாசமுள்ள ஜெபம்'' என்பதே நமது விண்ணப்பம் (யாக்கோபு 5:15). ''விசுவாசத்தில் குமாரர், குமாரத்திகள்'' என்பவரே நமது நற்செய்திப்பணியின் கனிகள் (1 தீமோத்தேயு 1:2). ''விசுவாசத்திற்கான போராட்டம்'' என்பதே நமது யுத்தம் (1 தீமோத்தேயு 6:12). ஆதிச் சபையின் வரலாற்றுப் புத்தகமாகிய அப்போஸ்தலர் நடபடிகளில் ''விசுவாசி'' எனும் சொல் எத்தனை முறை வருகிறதென்று பாருங்கள்!

இது எளிமையாய்த் தோன்றினாலும், இவ்விதக் கன்னி விசுவாசத்தைக் காத்துக்கொள்ள நாம் ''போராட'' வேண்டும். இதோ, அப்போஸ்தலன் பவுலின் சாட்சி: ''நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன்; ***விசுவாசத்தைக்*** காத்துக்கொண்டேன்'' (2 தீமோத்தேயு 4:7). ''ஒரே தரம் பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட ***விசுவாசத்திற்காய்த்*** தைரியமாய்ப் போராடவேண்டும்'' என்று அப்போஸ்தலன் யூதா அழைக்கிறார் (யூதா 3). ''எல்லாவற்றுக்கும் மேலாக'' நாம் ***விசுவாசம்*** எனும் கேடகத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டுமாம் (எபேசியர் 6:16). தொடர் பணிக்கான தங்களது மிஷனரிப் பயணத்தின்போது அப்போஸ்தலர் பவுலும் பர்னபாவும் புதிய விசுவாசிகளுடைய மனதைத் திடப்படுத்தி, ''***விசுவாசத்தினால்*** நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லி, நாம் அநேக உபத்திரவங்கள் வழியாய் இறையரசில் நுழைய வேண்டும்'' என்றனர் (அப்போஸ்தலர் 14:22). ஆம், எதிர் நீச்சல் போட்டுத்தான் கிறிஸ்தவ வாழ்வில் விசுவாசத்தைத் தக்க வைத்துக்கொள்ள முடியும்!

பொன்னிலும் விலையுயர்ந்த நமது விசுவாசம் பல அக்கினிப் பரீட்சைகளினால் சோதிக்கப்படும் (1 பேதுரு 1:6,7). இயேசுவைப் பொருத்தவரை, நாம் முடிவு காலத்திற்குள் வர வர விசுவாசத்தைக் காத்துக் கொள்வது கடினம்தான் (லூக்கா 18:8ஆ).

அப்படியானால், ''கிரியை இல்லாத விசுவாசம் செத்தது'' எனும் கூற்றின் பொருளென்ன? (யாக்கோபு 2:17). தானதர்மச் செயல்களையே இப்பகுதியில் அப்போஸ்தலன் யாக்கோபு குறிப்பிடுகிறார் (வச 14-16). கிரியைகளை இரட்சிப்புக்கு நிபந்தனையாய் அல்ல, அதற்கு நிரூபணமாய்ப் பேசுகிறார். எபேசியர் 2:9,10இல் அப்போஸ்தலன் பவுல் இதைத் தெளிவாக்குவதைக் கவனியுங்கள்: ''கிரியைகளினால் அல்ல, நற்கிரியைகளைச் செய்வதற்காய் நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் படைக்கப்பட்டிருக்கிறோம்'' (Not BY works, but FOR works!). இரட்சிப்பை முக்காலங்களில் பார்க்கவேண்டும்: (அ) கடந்த கால இரட்சிப்பு — ''நாம் விசுவாசிகளானபோது'' (ரோமர் 13:11) — பாவத்தின் *தண்டனையிலிருந்து* விடுதலை. (ஆ) நிகழ் கால இரட்சிப்பு — ''இரட்சிப்பு இப்பொழுது சமீபம்'' (ரோமர் 13:11) — பாவத்தின் *வல்லமையிலிருந்து* விடுதலை. இங்குதான் பயத்தோடும் நடுக்கத்தோடும் நமது இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவேண்டும் (பிலிப்பியர் 2:12). அதாவது தேவ மகிமைக்காக அவரது ''மாசற்ற பிள்ளைகளாய்'' நடந்துகொள்ள முயலவேண்டும் (வச 15). (இ) எதிர்கால இரட்சிப்பு — ''தமக்காக (விசுவாசத்துடன்) காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாம் தடவை பாவமில்லாமல் கிறிஸ்து தரிசன

மாவார்" (எபிரெயர் 9:28) — பாவத்தின் *பிரசன்னத் திலிருந்தே* விடுதலை. இது நமது சரீர மீட்பையும் உள்ளடக்கும் (ரோமர் 8:23).

விசுவாசத்தைக் குறித்துப் பேசும்போது பெற்றோரது பொறுப்பையும் இங்கு குறிப்பிடவேண்டும். தாய் தந்தையரும், பாட்டி தாத்தாவும் விசுவாசத்தில் உறுதியாயிருந்து அதனைப் பிள்ளைகளுக்கும் பேரப் பிள்ளைகளுக்கும் கடத்தவேண்டும். தீமோத்தேயுவின் பாட்டி லோவிசாளும், தாய் யூனிக்கேயாளும் இதற்கு முன்னுதாரணமாய்த் திகழ்ந்தனர் (2 தீமோத்தேயு 1:5). துர்ப்பாக்கியமாக, கர்த்தரைவிடக் கம்ப்யூட்டரில்தான் நமது பிள்ளைகளுக்கு அதிக நம்பிக்கை! தனது விசுவாசக் கப்பலைச் சேதப் படுத்திவிடாதபடி இங்குதான் குறிப்பாய்த் தீமோத்தேயுவை அப்போஸ்தலன் பவுல் எச்சரித்தார் (1 தீமோத்தேயு 6:20,21).

**பாடுங்கள் —**

*பிளவுண்ட மலையே,*
*புகலிடம் ஈயுமே;*
*பக்கம் பட்ட காயமும்,*
*பாய்ந்த செந்நீர் வெள்ளமும்*
*பாவ தோஷம் யாவையும்*
*நீக்கும்படி அருளும்.*

*எந்தக் கிரியை செய்துமே,*
*உந்தன் நீதி கிட்டாதே;*
*கண்ணீர் நித்தம் சொரிந்தும்*
*கஷ்ட தவம் புரிந்தும்,*
*பாவம் நீங்க மாட்டாதே;*
*நீரே மீட்பர் இயேசுவே!*

# 3. கிருபை மட்டுமே!

*(Grace alone!)*

"கிரியைகளா, விசுவாசமா" என்பதனை முந்திய முழக்கத்தின்கீழ் கவனித்தோம். ''நியாயப்பிரமாணமா, கிருபையா'' என்பதனை இப்பொழுது பார்ப்போம்.

நியாயப்பிரமாணம், கிருபை ஆகிய இரண்டையும் பைபிள் தெளிவாய் வேறுபடுத்திக் காட்டுகிறது. யோவான் 1:17இல் துவங்குவோம்: ''நியாயப்பிரமாணம் மோசேயின் மூலம் கொடுக்கப்பட்டது; ***கிருபையும்*** சத்தியமுமோ இயேசு கிறிஸ்து மூலம் உண்டாயின.'' நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்தின் கீழிருந்த யூதருக்கு இயேசு கொடுத்த அழைப்பில் இது தெளிவு: மத்தேயு 11:28-30, "வருத்தப்பட்டுப் பாரம் சுமப்பவர்களே, என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல்

ஏற்றுக்கொண்டு, என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயுமிருக்கிறது.'' பாவத்தின் பாரத்தை அல்ல, நியாயப்பிரமாணத்தின் "நுகத்தையே" இயேசு இங்கு குறிப்பிடுகிறாரென்பது தெளிவு. தமது நுகத்தையும் நியாயப்பிரமாணத்தின் சுமையையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். "நுகம், பாரம்" போன்ற சொற்கள் புதிய ஏற்பாட்டில் பெரும்பாலும் இந்த அர்த்தத்தில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளன (லூக்கா 11:46; அப் போஸ்தலர் 15:10; கலாத்தியர் 5:1).

நாம் நீதிமானாக்கப்படுதல் என்பது நம்மைப் பொருத்தவரை முழுக்க முழுக்க விசுவாசத்தினால் மட்டுமே; தேவனைப் பொருத்தவரை முழுக்க முழுக்கக் கிருபையினால் மட்டுமே. ரோமர் 3:23,24, ''எல்லாரும் பாவம் செய்து, தேவ மகிமையற்ற வர்களாகி, இலவசமாய் அவரது ***கிருபையினால்*** கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.'' இரட்சிப்பு என்பது தேவ கிருபையினால் நமக்குக் கிடைக்கும் அவரது ''ஈவு'' (எபேசியர் 2:8,9). அது ஒரு ''பரிசு'' அல்ல; அது ஓர் ''ஈவு!'' (Not an award or a reward or a prize, but a gift). ஈவு என்பதைச் சம்பாதிக்கவோ, அதற்காய்த் தகுதிபெறவோ முடியாது. பிரசங்கி களின் வேந்தன் C.H. ஸ்பர்ஜன் கூறியது: "இரட்சிப்பு முழுக்க முழுக்க தேவனது கிருபையினால் ஆனது; ஆக்கினைத் தீர்ப்பு முழுக்க முழுக்க மனிதனது விருப்பத்தினால் ஆவது!'' விசுவாசிக்க மறுக்கும் மனித சித்தமே அவனை நித்திய நரகத்திற்குள் தள்ளிவிடும்.

தேவனது ''*கிருபையின்* ஐசுவரியத்தினாலேயே'' நமக்குப் பாவ மன்னிப்பு உண்டாகிறது (எபேசியர் 1:7). நமது பாவங்கள் ''எண்ணிலடங்காதவையாய்'' இருக்கலாம்; ஆனால் ''அளவிட முடியாத'' தேவ கிருபையின் ''ஐசுவரியம்'' அவற்றைக் கவனித்துக்கொள்ளும்! இதைத்தான் மார்ட்டின் லூத்தர் ஓங்கியடித்தார். ஆலயக் கட்டுமானப் பணிக்குச் சீட்டுகளை விற்று அதன் மூலம் பாவ மன்னிப்பு பெறலாம் என்ற போப்பின் வாக்குறுதிக்கு எதிராய்க் குரலெழுப்பினார். அப்போஸ்தலன் பவுல் தேவ கிருபையை எவ்வளவு கொண்டாடினார் பாருங்கள்: 1 தீமோத்தேயு 1:14,15, ''பாவிகளில் *பிரதான* பாவி நான்; ஆனால் கர்த்தரின் *கிருபை* என்னிடம் *பரிபூரணமாய்ப்* பெருகிற்று!'' பவுலின் காலம் போற்றும் அறிக்கை நமது ஆவியை உற்சாகப்படுத்தி எழுப்பிவிடுகிறது: ''நான் இருப்பது தேவ *கிருபையினாலேயே''* (1 கொரிந்தியர் 15:10அ). எனவே, இரட்சிக்கப்பட்ட நண்பரே, இரட்சிக்கப்படாதோரை அற்பமாய் எண்ணாதீர். தெருக்களில் காவலதிகாரிகளால் இழுத்துச்செல்லப்பட்ட குடிகாரன் ஒருவனைச் சுட்டிக்காட்டி ஜான் வெஸ்லி சொன்னது: ''தேவ கிருபை மட்டும் இல்லாதிருந்தால் அதுதான் ஜான் வெஸ்லி!'' கிருபையின் உடன்படிக்கையின் கீழ் இருக்கும் நமக்கு ''மூதாதையர் பாவம்'' (generational sin) என்பதும் கிடையாது (எசேக்கியேல் 18:1-4; மாற்கு 10:13,14).

நமது வாழ்க்கை மட்டுமல்ல, நமது ஊழியமும் தேவ கிருபையினாலேயே ஆளப்படவேண்டும். தனது ஊழியத்தை ஓர் ஓட்டப்பந்தயத்திற்கு ஒப்பிட்டுத், தனது செய்தியைத் ''தேவனது *கிருபை*

***யின்*** சுவிசேஷம்'' என்றழைத்தார் பவுல் (அப்போஸ்தலர் 20:24). ''மற்ற எல்லா அப்போஸ்தலரையும்விட நான் அதிகம் பிரயாசப்பட்டேன்'' என்ற அவர், ''ஆனாலும் நான் அல்ல, எனக்குள் இருக்கும் தேவ ***கிருபையே*** அப்படிச் செய்தது'' என்றும் அறிக்கையிட்டார் (1 கொரிந்தியர் 15:10ஆ). பெருமையடித்துக்கொள்ள இடமேயில்லை! பணியாற்றுவதற்காய்த் தேவன் தரும் ஏதுக்களைப் பவுலடியார் ***''கிருபை*** வரங்கள்'' என்றழைத்தார் (ரோமர் 12:6). செருபாபேலுக்கு முன்னிருந்த வேலை இமயம் போன்றது. அவன் கட்டிட வல்லுனன்தான். அவன் கையிலிருந்த தூக்குநூல் தேவனது கண்களுக்குப் பிரியமாயிருந்தன. ஆனாலும் அப்பணியானது முடிக்கப்பெறுவது தேவ கிருபையினால் மட்டுமே: ''தலைக்கல்லை செருபாபேல் கொண்டு வருவான்; அதற்குக் ***கிருபை*** உண்டாவதாக, ***கிருபை*** உண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள்'' என்றார் தேவன் (சகரியா 4:7).

பெருங்கூட்ட சுவிசேஷப் பணியில் வேறெவரையும்விடத் தேவன் அவரை ஏன் அதிகமாய்ப் பயன்படுத்துகிறாரெனப் பில்லி கிரஹாமிடம் ஒரு முறை கேட்கப்பட்டதாம். அவரது பதில்: ''நான் விண்ணகம் சென்றதும் தேவனிடம் கேட்கப்போகும் முதல் கேள்வி இதுதான். இன்று எனது பதில், அது தேவ ***கிருபையே!''***

கிருபையை வலியுறுத்தும் அதே வேளையில் வேதனைக்குரிய ஒரு காரியமுமுண்டு. அதாவது, ''மிகைப்படுத்தப்பட்ட கிருபை'' (hyper-grace) எனும் ஒரு நூதன உபதேசம் திருச்சபைக்குள் நுழைந்திருக்கிறது. ''எப்படி வேண்டுமானாலும்

வாழலாம்; தேவ கிருபை எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும்'' என்பதே ஏறத்தாழ இவ்வுபதேசத்தின் தாற்பரியம். இவ்வுபதேசம் வாலிபர், நங்கையர்க்குக் கவர்ச்சியாயிருப்பதால் இதனைப் பிரசங்கிக்கும் கூட்டங்களில் அவர்கள் திரளாய்க் கூடுகிறார்கள். இந்தியாவில் இவ்வுபதேசத்தினால் வெகுவாய்ப் பாதிக்கப்பட்டிருப்பது சென்னை நகர்தான்.

தனது காலத்திலேயே அப்போஸ்தலன் பவுல் ''மிகைப்படுத்தப்பட்ட கிருபை'' (hyper-grace) போன்ற உபதேசங்களுக்கெதிராய் முன்னெச்சரித் தார். சீர்திருத்தக் காலங்களில் பாடப்புத்தகமாய் அமைந்திருந்த ரோமர் நிருபத்தில் ஒரு வசனப் பகுதியைப் பாருங்கள்: ரோமர் 5:20 முதல் 6:2 வரை, ''பாவம் பெருகிய இடத்தில் ***கிருபை*** அதிகமாய்ப் பெருகிற்று... ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிப் ***பாவத்தில்*** நிலைநிற்க லாம் என்று சொல்லுவோமா? (கூடவே) கூடாதே! பாவத்திற்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?''

கிருபை என்பது பாவம் செய்வதற்கு உரிமம் அல்ல. பாவத்தை மேற்கொள்ள நமக்குள் தேவன் வைக்கும் அனுகூலமே அது. ரோமர் 6:14இலிருந்து இது தெளிவு: ''நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் ***கிருபைக்குக்*** கீழ்ப்பட்டிருப்பதால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது!'' இதுதான் புதிய உடன்படிக்கையின் வாக்கு: எரேமியா 32:40, ''அவர்கள் என்னை விட்டு அகன்றுபோகாதபடி, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்தில் வைப்பேன்.''

கிருபையானது இலவசம்தான்; ஆனால் மலிவானதல்ல. (Free, but not cheap!) விசுவாசத்திற்காய்ப் போராடிய அப்போஸ்தலன் யூதா மிகைப்படுத்தப்பட்ட கிருபை எனும் உபதேசத்தைக் கண்டித்தார். ''தேவ ***கிருபையைக்*** காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டும் பக்தியற்றவர்கள்'' பக்க வழியாய் நுழைவதைக் குறித்துப் பரிசுத்தவான்களை அவர் எச்சரித்தார் (யூதா 4).

அதே வேளையில், பிரியமானவர்களே, பிரமாணக் கொள்கை எனும் வலையிலும் சிக்கிவிடாதீர்கள். ''நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையில் நிலைகொண்டிருங்கள்'' (கலாத்தியர் 5:1). பிரமாணக் கொள்கையைத் தழுவினால் ***''கிருபையிலிருந்து*** விழுந்து'' விடுவீர்கள் (வச 4). நாட்களை அனுசரித்தல், உணவுப் பழக்கங்கள் போன்றவையெல்லாம் தனி நபர்களின் விருப்புவெறுப்பைப் பொறுத்தவை (ரோமர் 14:6). ''தொடாதே, ருசி பாராதே, தீண்டாதே'' என்றெல்லாம் போதிக்கும் மார்க்கம் குறித்து எச்சரிக்கை! (கொலோசெயர் 2:20-23).

தேவனது இலவசமான கிருபை நம்மீது நிறைய பொறுப்புகளை வைக்கிறது. தேவனது ஏகாதிபத்தியத்தையும் மனிதனது பொறுப்பையும் (God's sovereignty & man's responsibility) நாம் சமநிலைப்படுத்தாவிடில் திருமறையின் ஒட்டுமொத்தமான உபதேசத்தைத் தவறவிடுவோம். எடுத்துக்காட்டாக, எவருக்காவது விரோதமாக நமது இருதயத்தில் கசப்பை வேரூன்றவிட்டால், ''தேவனது ***கிருபை***

***யை*** இழந்துவிடுவோம்'' (எபிரெயர் 12:14,15). இங்கு தேவ கிருபை என்பது கசப்புக்கு எதிரான அவரது கனிவைக் குறிக்கும். அவ்விதமே, ''தேவ ***கிருபையானது*** நாம் அவபக்தியையும் உலகு சார்ந்த தீய நாட்டங்களையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகில் வாழவேண்டுமென நமக்குப் போதிக் கிறது'' (தீத்து 2:11,12).

நாம் மேற்கொள்ளும் ஆன்மீகப் பயிற்சி எதையும் குறித்துப் பெருமையடிக்காதபடிக் கவனமாயிருப் போம்! இடைவிடாமலும் சோர்ந்துபோகாமலும் ஜெபிக்கும்படி கிறிஸ்துவிடமிருந்து கட்டளை பெற் றிருக்கிறோம். தேவன் நமது ஜெபங்களுக்குப் பதில் தருகையில், நாம் ஜெபிப்பதைக் குறித்துப் பெரு மிதம் கொள்வது விழுந்த மனிதனின் சுபாவத்திற்கு இயல்பு. ஆனால் நினைவிற்கொள்ளவேண்டிய தொன்று: நமது ஜெபங்களை தேவனிடம் கொண்டு சேர்ப்பது நமது விசுவாசமானால், பதில்களைத் தேவனிடமிருந்து கொண்டுவருவது அவரது கிரு பையே! எனவேதான் அவரது ஆசனம் ***''கிருபா சனம்''*** எனப்படுகிறது (எபிரெயர் 4:16).

தேவனது அனுதினக் கிருபைக்காய்த் துதித்த வண்ணமிருங்கள். புலம்பல் 8:22,23, ''நாம் நிர் மூலமாகாதிருப்பது கர்த்தருடைய ***கிருபையே;*** அவரது ***இரக்கங்களுக்கு*** முடிவில்லை. அவை காலைதோறும் புதியவை; உமது ***உண்மை*** பெரி தாயிருக்கிறது.'' தேவனது இரக்கமும் உண்மையும் சேர்ந்ததே கிருபை!

பாடுங்கள் —

தம் கிருபை பெரிதல்லோ
எம் ஜீவனிலும் அதே
இம்மட்டும் காத்ததுவே
இன்னும் தேவை கிருபை தாருமே

தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை
வாழ்நாளெல்லாம் அது போதுமே
சுகமுடன் தம் பெலமுடன்
சேவை செய்யக் கிருபை தாருமே

நிர்மூலமாகாததும் நிற்பதுமோ கிருபை
நீசன் என் பாவம் நீங்கினதே
நித்திய ஜீவன் பெற்றுக் கொண்டேன்
காத்துக் கொள்ளக் கிருபை தாருமே

தினம் அதிகாலையில் தேடும் புது கிருபை
மூடும் திரை கிழிந்திடவே
தைரியமாய்ச் சகாயம் பெற
தேடி வந்தேன் கிருபை தாருமே

ஒன்றை ஒன்று சந்திக்கும் சத்தியம் உம் கிருபை
என்றும் மறவேன் வாக்குத்தத்தம்
நீதியுமே சமாதானமே
நிலை நிற்கும் கிருபை தாருமே

ஸ்தோத்திர ஜெபத்தினால் பெருகுதே கிருபை
ஆத்தும பாரம் கண்ணீரோடே
சோர்வின்றி நானும் வேண்டிடவே
ஜெப வரம் கிருபை தாருமே

கர்த்தர் வெளிப்படும் நாள் அளித்திடும் கிருபை
காத்திருந்தே அடைந்திடவே
இயேசுவே உம்மைச் சந்திக்கவே
இரக்கமாய்க் கிருபை தாருமே

(சகோதரி சாராள் நவரோஜி, 1938-2014)

## 4. கிறிஸ்து மட்டுமே!

(*Christ alone!*)

*Solo Christo!* கிறிஸ்து மட்டுமே! இம்முழக் கத்திற்குக் குறைந்தது 7 உட்கூறுகள் உண்டு —

### (1) கிறிஸ்துவே இரட்சிப்பிற்கு ஒரே வழி.

"***நானே*** வழி" என்ற இயேசு, "என் மூலமாக அல்லாது ஒருவனும் பிதாவானவரிடம் வர முடி யாது" என்றும் சொன்னார் (யோவான் 14:6). பன் மைத்துவம் (pluralism) என்பதே இன்றைய உலகின் சித்தாந்தம். அதாவது, "நீ நம்புவதும் சரி; நான் நம்புவதும் சரி" எனும் வாதம். இது விவிலியப் போதனை அல்ல. இது கிறிஸ்தவம் அல்ல. முதல் நூற்றாண்டு அப்போஸ்தலரின் முழக்கம் இதோ: அப்போஸ்தலர் 4:12, "இயேசு கிறிஸ்துவினால் அல் லாது வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழெங்கும் மனி தருக்குள் அவரது பெயரே அல்லாது வேறொரு பெயர் கட்டளையிடப்படவும் இல்லை!" மதச்

சகிப்பு எனும் பெயரில் மதச் சமரசத்திற்குள் நாம் சென்றுவிட முடியாது.

கிறிஸ்துவின் இவ்வார்த்தைகளைக் கவனியுங்கள்: யோவான் 10:7-9, "***நானே*** வாசல் ... என் வழியாய் ஒருவன் நுழைந்தால் அவன் இரட்சிக்கப்படுவான்." அவருக்கு முன்னர் வந்த கள்ளத் தீர்க்கரை "கொள்ளைக்காரர்" என்றழைத்தார். அவருக்குப் பின்வரும் "கள்ளக் கிறிஸ்துக்களும்" அப்படியே (மத்தேயு 24:23-25). "தெரிந்துகொள்ளப்பட்டவர்களும்" வஞ்சிக்கப்பட வாய்ப்புண்டு என்பது என்னே எச்சரிப்பு! "பெரிய" அற்புதங்கள் மூலமே கள்ளக் கிறிஸ்துக்கள் மக்களை ஏமாற்றுவர் என்று முன்னறிவித்தார் இயேசு. இன்று அற்புதம் எதுவும் இல்லாமலேயே மக்கள் ஏமாறுகின்றனர்! "அநேக" அந்திக்கிறிஸ்துக்கள் என்ற யோவானின் முன்னறிவிப்பைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அந்திக்கிறிஸ்துவின் ஆவி ஏற்கனவே இவ்வுலகில் நடமாடிக்கொண்டிருக்கிறது (1 யோவான் 2:18; 4:3).

## (2) கிறிஸ்துவே ஒரே நடுவர்.

இச்சத்தியத்தை மிகத் தெளிவாக விளக்கும் பகுதி 1 தீமோத்தேயு 2:5,6, "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனிதருக்கும் நடுவரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனிதராகிய ***கிறிஸ்து இயேசு*** அவரே." 2 கொரிந்தியர் 5:18-21ஐயும் வாசியுங்கள்: "தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்முடன் ஒப்புரவாக்கினார்... கிறிஸ்துவுக்குள் உலகத்தாரைத் தமக்கு ஒப்புரவாக்கினார் ... பாவம் அறியாத கிறிஸ்துவைத் தேவன் நமக்காகப் பாவமாக்கினார்." பெண்களுக்

குள் அன்னை மரியாள் பேறுபெற்றவர்கள்தான். ஆனால் அவர்கள் நமக்காய் வேண்டுதல் செய்ய முடியாது. கானாவூர் கலியாண வீட்டில் மட்டும் தான் தேவைக்காய் அன்னை மரியாள் இயேசுவை நாடினார்கள். அவர்களுக்குத் திட்டமாக இயேசு கொடுத்த உடனடிப் பதிலைக் கவனியுங்கள்: ''எனக்கும் உங்களுக்கும் என்ன?'' (யோவான் 2:4). பரிசுத்தவான்களிடம் வேண்டுவதும் திருவிவிலியத்திற்கு எதிரானது. இயேசு போதித்தது: *''என்* பெயரால் நீங்கள் எதைக் கேட்டாலும் ... நான் பிதாவை வேண்டுவேன்'' (யோவான் 14:14,16). ''மரியாளின் பெயரால் நீங்கள் எதைக் கேட்டாலும்'' என்றல்ல! சிலுவையில் கிறிஸ்து முடித்துவிட்டதோடு எதையும் கூட்டத் துணியாதிருப்போம்!

## (3) கிறிஸ்துவே நமக்காய்த் தேவனுக்குமுன் ஒரே ஆசாரியர்.

''இயேசுவானவர் என்றென்றும் நிலைத்திருப்பதால் மாறிப்போகாத ஆசாரியத்துவம் உள்ளவராயிருக்கிறார். மேலும், தமது மூலம் தேவனிடம் சேருகிறவர்களுக்காய் வேண்டுதல் செய்யும்படி அவர் எப்பொழுதும் உயிரோடு இருக்கிறவராதலால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்'' (எபிரெயர் 7:24,25). பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து தமது பிள்ளைகள் ''யாவரையும்'' ''ஆசாரியர்'' ஆக்கிவிட்டார் (1 பேதுரு 2:5,9). தேவனைத் துதிக்கும் ஆசாரியர்கள்! தேவனது தூதறிவிக்கும் ஆசாரியர்கள்! கிறிஸ்துவின் மறுவருகைக்கு முன்னரும் பின்னரும் நாம் தேவனுக்குமுன் ஆசாரியர்களாம் (வெளிப்படுத்தல் 1:6,7; 5:10; 20:6).

‘‘அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம்’’ (Priesthood of all believers) என்பது சீர்திருத்தக் காலங்களில் பிரதானமாய் வலியுறுத்தப்பட்ட சத்தியங்களில் ஒன்று. துர்ப்பாக்கியமாக இது இன்று ஏட்டில்தான் உண்டு; நடைமுறையில் கிடையாது. இறைமக்களுக்குள் ஆசாரியர், ஆசாரியரல்லாதோர் (clergy & laity) என்று இரு வகுப்பினர் இருப்பதைப் புதிய ஏற்பாடு சகிக்காது. ஆசாரியல்லாதோரே (laity) கிடையாது; இறைமக்கள் யாவரும் ஆசாரியரே (clergy = Gr. *klerios*). குருப்பட்டங்களை (clerical titles) நாடியலையாதீர்! (மத்தேயு 23:8-10). பாவ அறிக்கை செய்யவேண்டியது தேவனிடம்தான்; எந்தப் பாதிரியிடமும் அல்ல. தேவன் ஒருவரே பாவங்களை மன்னிக்க முடியும் (மாற்கு 2:7,10; 1 யோவான் 1:7-9). “அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம்” எனும் இம்முக்கிய வேதவுபதேசம் திருச்சபையில் அமுலாக்கப்படும்வரை திருச்சபையானது வேலையில்லாதோரின் சங்கமாகவே (club) தொடரும். உலகமானது நற்செய்தியறிவிக்கப்படாமலேயே திணரும்.

### (4) கிறிஸ்துவே திருச்சபையின் ஒரே அஸ்திபாரம்.

திருச்சபையைக் குறித்த ‘‘மேன்மையான வெளிப்பாடுகளைத்’’ தேவன் அப்போஸ்தலன் பவுலுக்குக் கொடுத்தார். பவுலின் நிருபங்கள் புதிய ஏற்பாட்டில் இடம் பெறாதிருந்தால் திருச்சபையின் இரகசியம் மற்றும் அதின் செயல்பாடு குறித்த அநேகக் காரியங்கள் நமக்குத் தெரிந்திருக்காது. அவர் எழுதியது: 1 கொரிந்தியர் 3:10,11, ‘‘எனக்கு

அளிக்கப்பட்ட தேவ கிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல் அஸ்திபாரம் போட்டேன் ... போடப்பட்டிருக்கிற ***அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை*** அல்லாது வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது.'' அப்போஸ்தலன் பேதுரு மீதல்ல, அவருக்குப் பிதாவாகிய தேவன் கொடுத்த வெளிப்பாட்டுச் சத்தியத்தின்மீதே தமது சபையைக் கட்டுவதாக இயேசு வாக்களித்தார் (மத்தேயு 16:18,19). ஆம், இயேசுவைக் குறித்து நாம் என்ன நினைக்கிறோம் என்பதே நமது தனி வாழ்வுக்கும் சபை வாழ்வுக்கும் அடித்தளம். தமது ''அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள்'' மூலம் தேவன் நமக்கருளியுள்ள வெளிப்பாடுகள் எனும் அடித் தளத்தளத்தின்மீதுதான் நாம் ''கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாய்க்'' கட்டப்படுகிறோம் (எபேசியர் 2:20-22). முதலாவது யூதருக்கும் அடுத்துப் புறவினத்தாருக்கும் கதவைத் திறந்துவிடும் ஒரு ''சாவியாகத்தான்'' தேவன் பேதுருவைப் பயன்படுத்தினார் (மத்தேயு 16:19; அப்போஸ்தலர் 2:40,41; 10:44-47). கிறிஸ்துவே ஒரே அடித்தளம் என்று பேதுருவே தெளிவுபடுத்துவதைக் கவனியுங்கள்: 1 பேதுரு 2:6-8, ''இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமான மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லையென்று வேதத்தில் சொல்லியிருக்கிறது.'' இது ஏசாயா 28:16இலிருந்து எடுத்தாளப்பட்டது: ''அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட ***அஸ்திபாரம்*** உள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்.''

கிறிஸ்துவானவர் திருச்சபையின் அடித்தளம் மட்டுமல்ல, அதற்குத் ***தலையானவருமாய்*** இருக்கிறார். திருச்சபைக்குத் தலைவர் போப்போ எந்தப் பேராயரோ அல்ல! (எபேசியர் 1:22; 4:15; கொலோசெயர் 1:18). "தலையானவரை" நாம் பற்றிக்கொள்ளாவிட்டால் துர்வுபதேசங்கள் தலைவிரித்தாடும் (கொலோசெயர் 2:18-22).

*என் மீட்பர் இரத்தம் சிந்தினார்;*
*மா நீதியும் சம்பாதித்தார்;*
*என் சொந்த நீதி வெறுத்தேன்,*
*இயேசுவின் நாமம் நம்புவேன்:*

*நான் நம்பும் பாறை கிறிஸ்துதான்,*
*வேறஸ்திபாரம் மணல்தான்!*

## (5) கிறிஸ்துவை எவரோடும் ஒப்பிட முடியாது.

மறுரூப மலையில் பேதுரு உளறிய வார்த்தைகளை நன்கறிவோம். அந்த மலையில் இயேசுவுக்கும் மோசேக்கும் எலியாவுக்கும் ஆளுக்கொரு கூடாரம் போடலாமென அவர் சொல்லியபோது இயேசுவை மோசேயோடும் எலியாவோடும் சமப்படுத்தினார். "தான் பேசுகிறது இன்னதென்று அறியாமல்" பேதுரு பேசியதைப் பரலோகம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை (மாற்கு 9:6). அவர் பேசிக்கொண்டிருக்கையிலேயே திடீரென ஒரு மேகம் அவர்களை மறைத்து, ***"இவர்"*** எனது நேச குமாரன், ***"இவரில்"*** பிரியமாயிருக்கிறேன், ***"இவருக்குச்"*** செவிகொடுங்கள் என்ற சத்தம் உண்டானது பேதுருவின் கூற்றின்மீது தேவனது வருத்தத்தைக் காட்டுகிறது (மத்தேயு 17:5,6).

கிறிஸ்து ஒப்பற்றவர், நிகரற்றவர்! இந்தியாவில் தெய்வங்களாய்த் தங்களைக் காட்டிக்கொள்வோர் (god-men) நிறையவுண்டு, கவனம்!

## (6) கிறிஸ்துவின் மூலமே அனைத்து இறையாசிகளும்

எபேசியர் நிருபத்தை புதிய ஏற்பாட்டின் எவரெஸ்ட் எனலாம். உன்னதத்திற்கு உயர்த்தப்பட்ட கிறிஸ்துவோடு நமக்குள்ள ஆசிகளை அது விளக்குகிறது. "***கிறிஸ்துவுக்குள்*** உன்னதங்களில் ஆவிக்குரிய ***சகல*** ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதிக்கும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்" (எபேசியர் 1:3). கிறிஸ்து உயர்த்தப்பட்டதாலும், நாம் அவரை விசுவாசிப்பதாலேயுமே பரிசுத்த ஆவியானவரின் பொழிவு (யோவான் 7:37-39). பெந்தெகொஸ்தே நாளின் பிரசங்கத்தில் பேதுரு இதைக் குறிப்பாய் விளக்குகிறார்: அப்போஸ்தலர் 2:33, "இயேசுவானவர் தேவனது வலது கரத்தினால் உயர்த்தப்பட்டு, பிதாவானவர் அருளிய வாக்கின்படிப் பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமான இதனைப் பொழிந்தருளினார்." நாம் கிறிஸ்துவை உடையவர்களாயிருக்கும்போது எல்லாம் உள்ளவர்களாயிருக்கிறோம். அவரே நமக்கு எல்லாமுமாயிருக்கிறார்: "ஞானம் ... நீதி ... மீட்பு" (1 கொரிந்தியர் 1:31). கிறிஸ்துவே திருமறைக்கு மையமானவர் (Christocentric) என்கிறோம். நமது வாழ்வுக்கும் கிறிஸ்துவே மையமானவராயிருக்க வேண்டும். "நான் அல்ல, கிறிஸ்துவே!" (கலாத்தியர் 2:20).

## (7) கிறிஸ்துவே ஒரே ஆண்டவர்.

நியாயப்பிரமாணம் அமுலில் இருந்த சுவி சேஷங்களின் காலங்களில் கிறிஸ்து ஓய்வு நாளுக் கும் ஆண்டவர் (மாற்கு 2:28). நடபடிகள் புத்தகத் தில் அவர் அறுப்பின் ஆண்டவர் (மாற்கு 9:38; அப்போஸ்தலர் 2:4; 4:4). நிருபங்களில் அவர் திருச் சபையின் ஆண்டவர் (எபேசியர் 5:29). வெளிப் படுத்தல் புத்தகத்தில் அவர் இராஜாதி இராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக, நாடுகளின் ஆண்டவர் (வெளிப்படுத்தல் 17:14; 19:16; 1 தீமோத்தேயு 6:15). மொத்தத்தில் அவர் எல்லாருக்கும் ஆண்டவர் (அப்போஸ்தலர் 10:36).

■ அப்பம் பிட்பதற்காய் நாம் கூடிவருவது ***கிறிஸ் துவை*** அவரது ''மரணம்'' மற்றும் ''மறுவருகை யின்'' பின்னணியில் நினைவுகூருவதற்காகவும், அவரது சரீரமாகிய சபையின் உடன் உறுப்புகளா னவர்களோடு அடையாளப்படுத்திக்கொள்வதற்காக வுமே (1 கொரிந்தியர் 11:26). அப்பமும் ரசமும் கிறிஸ்துவின் சரீரமாகவும் இரத்தமாகவும் மாறி விடுகின்றன (transubstatiation) எனும் உபதேசம் திருவசன அடிப்படையற்றது. அப்படியே, கிறிஸ்து வின் சரீரமும் இரத்தமும் அப்பத்துடனும் ரசத்து டனும் இணைந்துவிடுகின்றன (consubtantiation) எனும் உபதேசமும் திருமறைக்குப் புறம்பானது. இவையெல்லாம் விக்கிரகாராதனைக்கடுத்த நம்பிக் கைகள். அப்பமும் ரசமும் புனிதப் பொருட்கள் எனும் அர்த்தம்கொள்ளும் சாக்கிரமெந்துகள் (sacraments) அல்ல; அவை கிறிஸ்துவோடுள்ள நமது ஐக்கி யத்தின் அடையாளச் சின்னங்கள் (symbols) அவ்

வளவுதான் (1 கொரிந்தியர் 10:16). அப்பம் பிட்குதல் ஒரு கொண்டாட்டமாயிருக்கவேண்டும்; ஆச்சார மாகிவிடக்கூடாது. (Celebration, not a ceremony). தேவனுக்குமுன் களிகூரத் தினமும் கூடிவரும் பழக் கம் இப்பொழுது வாராந்திர அல்லது மாதாந்திரச் சடங்காகி (ritual) விட்டது (அப்போஸ்தலர் 2:46).

**பாடுங்கள் —**

(The Church's one foundation ...)

*சபையின் அஸ்திபாரம் நல் மீட்பர் கிறிஸ்துவே*
*சபையின் ஜன்மாதாரம் அவரின் வார்த்தையே*
*தம் மணவாட்டியாக வந்ததைத் தேடினார்*
*தமக்குச் சொந்தமாக மரித்ததைக் கொண்டார்*

*எத்தேசத்தார் சேர்ந்தாலும் சபை ஒன்றே ஒன்றாம்*
*ஒரே விஸ்வாசத்தாலும் ஒரே இரட்சிப்புண்டாம்*
*ஒரே தெய்வீக நாமம் சபையை இணைக்கும்*
*ஓர் திவ்ய ஞானாகாரம் பக்தரைப் போஷிக்கும்*

*மேலான வான காட்சி கண்டாசீர்வாதத்தை*
*பெற்றுப் போர் ஓய்ந்து வெற்றி சிறந்து மாட்சிமை*
*அடையும் பரியந்தம் இன்னா உழைப்பிலும்*
*நீங்காத சமாதானம் மெய்ச் சபை வாஞ்சிக்கும்*

*(S.J. Stone, 1839-1900)*

# 5. தேவ மகிமை மட்டுமே!

*(Glory of God alone!)*

''மனிதனின் முடிவான நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதே!'' இது உன்னதமான இறையியல் கூற்றுக்களில் ஒன்று. எனவேதான், ''நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் தேவ ***மகிமைக்கென்றே*** செய்யுங்கள்'' என்றெழுதினார் பவுலடியார் (1 கொரிந்தியர் 10:31). சாப்பிடுவது கூட விதிவிலக்கல்ல என்றால், தேவனை மகிமைப் படுத்தாத எதையுமே நாம் செய்யக்கூடாது.

அனைத்துக் காரியங்களிலும் தேவனுக்கே மகிமை சேர்ப்பதற்கு நிகரற்ற எடுத்துக்காட்டு கிறிஸ்துவின் வாழ்க்கையே. ''உன்னதத்திலிருக்கும் தேவனுக்கு ***மகிமை''*** என்று அவரது பிறப்பின் போது பரம சேனைத் திரள் ஆர்ப்பரித்தது (லூக்கா 2:14). தமது சீடருக்குக் கற்பித்த ஜெபத்தை ''இராஜ்யமும் வல்லமையும் ***மகிமையும்*** உம்முடையவைகளே, ஆமென்'' என்று இயேசு முடித்தார் (மத்தேயு

6:13அ). இயேசுவை ஒரு வழக்கறிஞன் ''நல்ல போதகரே'' என்று அழைத்தபோது, ''என்னை நல்ல வர் என்று நீ அழைப்பானேன்? ***தேவன்*** ஒருவர் தவிர நல்லவர் ஒருவருமில்லையே'' என்று உடனே பதிலளித்தார் (மத்தேயு 19:16,17). தமது பிதாவா னவருக்கே உரிய மகிமையை இயேசு எவ்விதம் தொடாதிருந்தார், பாருங்கள்! திமிர்வாதக்காரன் ஒரு வனை அவர் சுகமாக்கியபோது, ''மனிதருக்கு இவ் வித அதிகாரம் கொடுத்தவராகிய ***தேவனை*** *மகி மைப்படுத்தினார்கள்''* (மத்தேயு 9:8; லூக்கா 7:16). ஐந்தப்பம் இருமீனைக் கொண்டு ஐயாயிரத்திற்கும் அதிகமானோருக்கு இயேசு உணவளித்தபோது, மக் கள் அவரைப் பலவந்தமாய் இராஜாவாக்க முயன் றனர்; ''அவரோ தனித்திருக்கும்படி ஒரு மலைக்குச் சென்றுவிட்டார்!'' (யோவான் 6:15). ''பூவுலகில் நான் உம்மை ***மகிமைப்படுத்தினேன்''*** என்று தமது பிரதான ஆசாரிய ஜெபத்தில் பிதாவுக்குமுன் இயேசு அறிக்கையிட்டார் (யோவான் 17:4). இயேசுவே கர்த்தரென்று முழங்கால் யாவும் முடங்குவதும் நாவு யாவும் அறிக்கையிடுவதும் முடிவாகப் ''பிதாவாகிய ***தேவனுக்கு மகிமை*** உண்டாகவே'' (பிலிப்பியர் 2:9-11).

பிரியமானவரே, நமது வாழ்வில் பல உசிதங்கள் இருக்கலாம்; ஆனால் அவை ஒன்றைக் குறித்தும் நாம் பெருமையடிக்கக்கூடாது. கர்த்தர் சொல்லு வதாவது: ''ஞானி தனது ஞானத்தைக் குறித்துப் பெருமையடிக்க வேண்டாம்; பலசாலி தனது பலத் தைக் குறித்துப் பெருமையடிக்க வேண்டாம்; செல்

வந்தன் தனது செல்வத்தைக் குறித்துப் பெருமை யடிக்க வேண்டாம்; பெருமிதம் கொள்பவன் நானே ***கர்த்தர்*** என்று என்னை அறிந்து உணர்ந்திருப்பதைக் குறித்தே மேன்மை பாராட்டட்டும்'' (எரேமியா 9:23,24). இது புதிய ஏற்பாட்டில் இவ்விதம் எடுத் தாளப்பட்டிருக்கிறது: ''மனுவுடலிலுள்ள எவனும் தேவனுக்குமுன் பெருமையடிக்காதபடி, மேன்மை பாராட்டுகிறவன் ***கர்த்தரைக்*** குறித்தே மேன்மை பாராட்டட்டும்'' (1 கொரிந்தியர் 1:29,31). விளை யாட்டு வீரருக்கு இதோ ஒரு செய்தி: ''விரும்பு கிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற ***தேவனாலேயாம்***'' (ரோமர் 9:16). செரு பாபேல் போன்ற கட்டிட வல்லநர்களுக்கு அதே விதமானதொரு செய்தி: ''பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, ***எனது ஆவியினா லேயே*** ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லு கிறார்'' (சகரியா 4:6,9). சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லும் வரம் பழைய ஏற்பாட்டு யோசேப்புக்கு அருளப்பட்டிருந்ததைப் பார்வோன் மெச்சியபோது, யோசேப்பு சொன்னது: ''நான் அல்ல, ***தேவனே*** உத்தரவு அருளிச்செய்வார்'' (ஆதியாகமம் 41:15,16).

சங்கீதம் 115:1இல் சங்கீதக்காரன் ஏறெடுத்த ஜெபத்தைவிட நறுமணமானதொன்று தேவனுக்கு முன் எதுவும் இருக்க முடியாது: ''எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது நாமத்திற்கே ***மகிமை*** வரப்பண்ணும்!'' இவ்வித இரட்டை அழுத்தம் தரும் இன்னும் சில திருவசனங்கள் இதோ: 1 நாளாகமம் 16:28; சங்கீதம் 29:1; 96:7.

நமக்கு முடிசூட்டுவது தேவனே என்றாலும், அவர் ஒருவரே ***மகிமையும்,*** கனமும், வல்லமையும் பெற்றுக்கொள்ளத் தகுதியானவராதலால், நமது தலைகள் அவரது பாதங்களிலேயே வைக்கப்படவேண்டும்! (வெளிப்படுத் தல் 4:4,10,11). நிருபங்களை எழுதும் வேளைகளிலும் இவ்வித மனப்பான்மையே அப்போஸ்தலரில் மேலோங்கியிருந்தது. அவர்கள் எழுதிக்கொண்டிருக்கும்போதே எவ்விதம் தேவனுக்கு ***மகிமை*** செலுத்தத் துடித்தனர் என்று பாருங்கள்: ரோமர் 11:36; கலாத்தியர் 1:15; 2 தீமோத்தேயு 4:18; எபிரெயர் 13:21; 1 பேதுரு 5:11. நிருபங்களை முடிக்குமுன்னரே "ஆமென்" என முழங்கினர்!

தேவனது அடிப்படைக் குணங்களில் ஒன்றாகிய அவரது "எரிச்சல்" என்பதை இச்சத்தியம் சார்ந்தது; எனவே இதனை எளிதாகக் கணித்துவிடக்கூடாது. பத்துக் கட்டளைகளில் துவங்கும் இச்சத்தியம் இறைநூலெங்கும் இழைபோல் ஓடுகிறது. யாத்திராகமம் 20:4,5, "யாதொரு விக்கிரகத்தையாவது நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறேன்." உபாகமம் 4:23,24; நாகூம் 1:2 ஆகிய வசனங்களையும் வாசியுங்கள். "எனது ***மகிமையை*** வேறொருவருக்கும் கொடுக்கமாட்டேன்" என்று திட்டமாய்ச் சொல்லுகிறார் தேவன் (ஏசாயா 48:11இ). பாபேலைக் கட்டிக்கொண்டிருந்தவர்கள் ***"நமக்குப்*** பெயர் உண்டாக்குவோம்" என்றபோது, திரித்துவ தேவன், ***"நாம்*** போய் அவர்களது மொழிகளைத் தாறுமாறாக்குவோம்" என்றார் (ஆதியாகமம் 11:4,7).

மோசே உண்டாக்கிய வெண்கலச் சர்ப்பத்திற்கு மக்கள் தூபங்காட்டிக்கொண்டிருந்தபோது மன்னன் எசேக்கியா அதைச் சுக்குநூறாய் நொறுக்கினான் (2 இராஜாக்கள் 18:4). சிலுவைக்குமுன் அல்லது சிலுவைச் சொரூபத்திற்குமுன் (crucifix) வணங்குவதைக் குறித்து எச்சரிக்கை! தேவனது எரிச்சலைக் கிளறிவிடாதீர்! நமது தேவன் பட்சிக்கும் அக்கினியாயிருக்கிறார் (உபாகமம் 4:23,24). புதிய ஏற்பாட்டுக்காலத்தில் தேவன் எந்த இடத்தையும் அல்ல, மக்களையே புனிதப்படுத்துகிறார். தேவ மக்கள் தான் ''பரிசுத்த ஆலயம்'' (எபேசியர் 2:19-22).

தேவனுக்கே மகிமை செலுத்தும் இக்காரியத்தில் அப்போஸ்தலர் மிகவும் கவனமாயிருந்தனர். முடமான பிச்சைக்காரன் சுகமடைந்தபோது, பேதுருவையும் யோவானையும் சுற்றி மக்கள் கூடினர். அவர்கள் மக்களைப் பார்த்து, ''நாங்கள் எங்கள் சொந்த சக்தியினாலோ சொந்த பக்தியினாலோ இவனை நடக்கப்பண்ணினோம் என்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?'' என்று கடிந்துகொண்டனர் (அப்போஸ்தலர் 3:12). மறுக்க முடியாத இந்த அற்புதங்களுக்கு அவர்கள் கொடுத்த விளக்கம்: ''தேவன் தமது பிள்ளையாகிய இயேசுவை ***மகிமைப்படுத்தினார்''*** (வச 13). இது யூதர்களின் கூட்டமொன்றில் நடந்தது.

யூதரல்லாதோரின் பெருங்கூட்டம் ஒன்றில் அப்போஸ்தலர் இன்னும் அதிகக் கண்டிப்புடன் செயல்பட்டனர். அது லீஸ்திராவில் நடந்தது. சப்பாணி ஒருவன் சுகமடைந்தபோது, ''தேவர்கள் நம்மிடம் இறங்கி வந்திருக்கிறார்கள்'' என்று உள்ளூரார்

கோஷமிட்டனர் (அப்போஸ்தலர் 14:11). அவர்கள் எருதுகளையும் பூமாலைகளையும் கொண்டுவந்து அப்போஸ்தலருக்குப் பலியிட ஆயத்தமாயினர். அப்போஸ்தலரோ தங்கள் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு கதறிச் சொன்னது: ''மனிதரே, ஏன் இப் படிச் செய்கிறீர்கள்?'' (வச 14,15). அன்று மாலைகள் வேண்டாமென்று அப்போஸ்தலர் ஓடினர்; இன்று பிரசங்கிமாராகிய நாமோ மாலைகள் நாடி ஓடு கிறோம்! எனவேதான் பெருமளவில் விளம்பரப் படுத்தப்படும் நமது சுகமளிக்கும் கூட்டங்களிலும் மறுக்க முடியாத இவ்வித அற்புத அடையாளங்கள் நடப்பதில்லை. மக்களுடைய பாராட்டுகளைக் கை யாள நாம் இன்னும் கற்றுக்கொள்ளாததாலேயே நம்மை நம்பித் தேவன் தமது அற்புத வல்லமையை வெளிப்படுத்தாதிருக்கிறார். தனது பாதங்களில் விழுந்து பணிந்த இராணுவ அதிகாரி கொர்நேலி யுவைப் பார்த்து, ''எழுந்திரும், நானும் ஒரு மனிதன் தான்'' என்றார் அப்போஸ்தலன் பேதுரு (அப் போஸ்தலர் 10:25,26). தூதனின் பாதத்தில் விழுந்த அப்போஸ்தலன் யோவானிடம் தூதன், ''நானும் ஓர் ஊழியன்தான்; தேவனைத் தொழுதுகொள்'' என்றான் (வெளிப்படுத்தல் 22:8,9).

மகிமை யாவையும் தேவனுக்கே செலுத்த நாம் கற்றுக்கொள்ளும்போது, ஊழியர்களுக்கிடையே நடக்கும் எலிப்பந்தயமும் ஒழியும். அப்போஸ்த லர்கள் வேதக் கலாசாலைகளில் பயின்றவர்கள் அல்ல; ஆனாலும் அவர்களுக்கிருந்த மிஷனரியியல் (missiology) அறிவைப் பாருங்கள்: 1 கொரிந்தியர் 3:6, ''நான் நட்டேன், அப்பொல்லோ நீர் பாய்ச் சினான், ***தேவனே*** விளையச் செய்தார்!'' நற்

செய்திப் பிரசங்கம் ஒன்று முடிந்ததும், கூட்டத் திலிருந்த ஒருவர் சுவிசேஷகர் D.L. மூடி அவர் களைத் தழுவியணைத்து, ''என்னே பிரசங்கியார்!'' என்று பாராட்டினார். இது சுவிசேஷகர் மூடியை மனமடிவாக்கிற்று. அறைக்குச் சென்று எங்கே தவறி விட்டார் என்று அழுது ஜெபித்து, தனது அர்ப் பணிப்பைத் தேவனுக்குமுன் புதுப்பித்தார். அடுத்த நாள் பிரசங்கம் முடிந்ததும் அதே நபர் சுவிசேஷகர் மூடியைப் பார்த்து, ''என்னே இரட்சகர்!'' என்று வியந்தார்! ஒவ்வொரு முறை பிரசங்கபீடத்தில் ஏறும் முன்னர், ''ஆண்டவரே, நான் ஒருபோதும் உமது மகிமையைத் தொடாதிருக்கட்டும்'' என்று ஜெபிக்க வேண்டும். மேடைப்பேச்சு முடிந்ததும் மக்கள் கர வொலி எழுப்பியபோது மகிமையைத் தேவனுக்குச் செலுத்தாத கிறிஸ்தவரல்லாத பேச்சாளரையே எரிச்சலுள்ள தேவன் விட்டுவைக்க வில்லை (அப் போஸ்தலர் 12:21-23). பிரசங்கிமாரைக் கதாநாயக வணக்கம் செய்யும் தீய பழக்கம் ஒழியட்டும்! (1 கொரிந்தியர் 3:4-7). பிரசங்கிமாரே, மக்களை உங்கள் பக்கம் ஈர்க்கும் எக்காரியத்தையும் தவிர்த்திடுங்கள். திருமுழுக்கினன் யோவானைப்போல தேவாட்டுக் குட்டியானவரையே சுட்டிக் காட்டுங்கள் (யோவான் 1:36,37).

*துதி கனம் மகிமை உமக்கே,*
*ஓ எல்லாமுமே, ஓ எந்நாளுமே*
*துதி கனம் மகிமை உமக்கே,*
*ஓ நீரே இராஜாவே*
*அல்லேலூயா, ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்*
*ஸ்தோத்திரம், மிக ஸ்தோத்திரம்*
*ஓ நீரே இராஜாவே!*

பாடுங்கள் —

*மகிமை உமக்கன்றோ*
*மாட்சிமை உமக்கன்றோ*
*துதியும் புகழும் ஸ்தோத்திரமும்*
*தூயவர் உமக்கன்றோ*

*ஆராதனை — ஆராதனை*
*அன்பர் இயேசுவுக்கே*

*விலையேறப் பெற்ற உம் இரத்தத்தால்*
*விடுதலை கொடுத்தீர்*
*ராஜாக்களாக லேவியராக*
*உமக்கெனத் தெரிந்துகொண்டீர்*

*வழிகாட்டும் தீபம் துணையாளரே*
*தேற்றும் தெய்வமே*
*அன்பால் பெலத்தால் அனல்மூட்டும் ஐயா*
*அபிஷேக நாதரே*

*உம் வல்ல செயல்கள்*
*மிகவும் பெரிய அதிசயமன்றோ*
*உம் தூய வழிகள் நேர்மையான*
*சத்திய தீபமன்றோ*

*எப்போதும் இருக்கின்ற இனிமேலும் வருகின்ற*
*எங்கள் ராஜாவே*
*உம் நாமம் வாழ்க உம் அரசு வருக*
*உம் சித்தம் நிறைவேறுக*

# முடிவுரை

திருச்சபைச் சீர்திருத்தம் இன்னும் முற்றுப் பெறவில்லை. அது படிப்படியாகத்தான் நடந்தேறும். கிறிஸ்துவின் மறுவருகை வரை அது தொடரும் —

அப்போஸ்தலர் 3:19-21, "கர்த்தருடைய சமுகத்திலிருந்து ***புத்துயிர்க் காலங்கள்*** வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடம் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படுவதற்காக நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். உலகத்தோற்றம் முதல் தேவன் தமது பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவை எல்லாம் நிறைவேறி முடியும் காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்." தமது முதலாம் வருகையின்போது தேவாலயத்தை இயேசு சுத்தம்பண்ணினார் (மத்தேயு 21:12,13). இரண்டாம் வருகை

யின்போது தமது சபையைத் தமக்குமுன் மகிமையான சபையாய் நிறுத்திக்கொள்வதற்காய்த் தொடர்ந்து திருவசனத்தால் அதைச் சுத்தம்பண்ணுவார் (எபேசியர் 5:25-27).

நம்மைப் பொருத்தவரை, திருமறைக்குப் புறம்பானவைகளை எதிர்த்துக்கொண்டும் (protest), திருமறை ஆமோதிப்பவைகளை ஆதரித்துக்கொண்டும் (promote) இருக்கவேண்டும்! அசைக்கப்பட முடியாதவை மட்டுமே நிற்கும்படி அசைக்கப்படக்கூடியவை அத்தனையும் அசைக்கப்படட்டும் (எபிரெயர் 12:27).

''சத்தியத்திற்கு விரோதமாக நாம் ஒன்றும் செய்ய முடியாது; சத்தியத்திற்கு அனுகூலமாகவே எதையும் செய்ய முடியும்'' (2 கொரிந்தியர் 13:8). சத்தியத்தைப் போதிப்பதால் சத்துருக்கள் பலரை நாம் சம்பாதிக்க நேரிடலாம் (கலாத்தியர் 4:16; மாற்கு 13:9). ஆனால் சத்தியம் மட்டுமே மக்களை விடுதலையாக்க முடியும் (யோவான் 8:32). நம்மை எதிர்க்கிறவர்களையும் நேசிப்போம்; அதே வேளையில் ''நான் நிற்கும் கன்மலையிலிருந்து இறங்கமாட்டேன்'' (Here I stand!) என்று உறுதியாய் நிற்போம்!

ஜெர்மானிய மொழியில் மார்ட்டின் லூத்தர் 1529இல் சங்கீதம் 46இன் அடிப்படையில் இயற்றிப் பின்னர் ஆங்கிலத்திலும், ஜெர்மானிய மொழியிலிருந்தே தமிழிலும் மொழியாக்கம் செய்யப்பட்ட ஒரு பாடலுடன் இக்கட்டுரையை முடிக்க விரும்புகிறேன் —

*A mighty fortress is our God ...*

*கர்த்தர்தான் எங்கள் துர்க்கமும் அரண் பலமுமாமே;*
*உண்டாம் இக்கட்டனைத்தையும் கழிப்பர்*
*அவர்தாமே.*
*பொல்லாங்கனின் சினம் இப்போது மா விஷம்,*
*துஷ்டமுஞ் சூதையும் அணிந்து உறுமும்,*
*நிகர் புவியில் இல்லை.*

---

*எதற்கு நாங்கள் வல்லவர்? இந் நீசர் சக்தியற்றோர்;*
*எங்களுக்காய் வேறொருவர் போர்*
*செய்வற்கேற்பட்டோர்*
*யார்? இயேசு கிறிஸ்துதான்! ஆ, இந்தப் பலவான்*
*எங்களின் இரட்சகர், சேனாபதி அவர்,*
*ஜெயிப்பார் அவர்தாமே.*


---

*விழுங்க வரும் பேய்களால் புவி நிரம்பினாலும்,*
*பயப்படோம்; கர்த்தாவினால் எதிர்த்து நிற்கக் கூடும்.*
*இருளின் பிரபு சீறினாலும், அது*
*வெல்லப்பட்டந்த பேய், தள்ளுண்கத் தீர்ந்ததே;*
*ஓர் சொல்லினால் முறியும்.*

---

*பகைஞர் தெய்வ வார்த்தையைப் பகைத்தும்,*
*அது நிற்கும்*
*கர்த்தர் சகாயர், அவர் கை வரந் தந்தாதரிக்கும்.*
*மாற்றான்கள் யாவையும் ஜீவனையே தானும்*
*வாங்கினாலும் கேடோ? இராஜ்யம் அல்லோ*
*எங்களுக்கே யிருக்கும்.*

**கிறிஸ்தவ வாழ்வில்**
**நிறைவாய் வளர உணவளிக்கும்**
**ஒரு தினசரித் தியான நூல் ...**




*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்*
*எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

***அனைத்துச் சபையினரும்...***
***அனைத்து வயதினரும்...***
***அனைத்துத் துறையினரும்...***
***விரும்பி வாசிக்கும்***
***ஒரு புதிய படைப்பு!***

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி,
பெங்காலி, மராத்தி, மலையாளம், தெலுங்கு
ஆகிய மொழிகளிலும் உண்டு.

*432 பக்கங்கள்*

*விலை ரூ. 150/– அனுப்பச் செலவு ரூ. 50/–*

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>*
*<evangeline@stanleyonbible.com>*

# Bible Study Helps

- ***Bible Foundation***

  Brother Stanley's handwritten notes of 4 weeklong Study Programmes of 1977, 1978, 1979 & 1984, in 4 Volumes, totally 400 pages of A4 size paper, spiral bound, cased in a rexin pouch. Available in English only.

- ***Bible Answers***

  Frank Answers by R. Stanley to 100 Questions, frequently asked but rarely answered, under seven sections: Christian Life, Christian Doctrine, Holy Spirit & Gifts, Church, Christian Ministry, Sex & Marriage, Social Life. 240 Pages. Available in English and Tamil.

- ***Bible Treasures***

  200 Corrective Bible Lessons, by R. Stanley, from the beginning of Christian Life to the end of Physical Life. 832 pages, Jacketed Hardcover. Available in English, Hindi, Tamil and Telugu.

- ***Bible Pearls***

  200 Select Sermon Outlines from Brother Stanley's 50+ years of pulpit Ministry, 1963-2016, under 14 heads, from Repentance to the Return of Christ. 1200 pages, Jacketed Hardcover. Available in English and Tamil.

*Contact us for details.*

**StanleyOnBible.com**

*A WEBSITE FOR BIBLE LOVERS*

## CONTENTS

- ***General Messages***
  Enlightening Articles for Christian Growth
- ***Sermon Outlines***
  Outlines on miscellaneous subjects for Personal Meditation and Pulpit Preaching
- ***Bible Studies***
  Studies on specific themes and select books of the Bible
- ***Doctrinal Essays***
  Corrective Teaching to uphold Sound Doctrines of the Bible
- ***Youth Matters***
  Practical Guidelines to Young Men and Young Women for Successful Living
- ***Leaders Column***
  Biblical Insights and Practical Lessons on Christian Leadership
- ***Missionary Challenge***
  Calling Christians to obey the Great Commission of Christ
- ***My Answers***
  Answers to Questions frequently asked but rarely answered
- ***Quotable Quotes***
  Stanley's analytical Statements about Christian Life and Ministry
- ***Video Talks***
  Stanley's Bible Sermons in Video & Audio format, freely downloadable

Register your e-mail id in this website
to receive updates and daily devotions.

## முடிவு வரிகள் ...

- ☐ உங்கள் கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளத்தை உறுப்படுத்திக்கொள்ள அடிக்கடி வாசிக்கும்படி இந்நூலைப் பத்திரமாய் வைத்துக்கொள்ளுங்கள்.

- ☐ உங்களது சபை மற்றும் பிற சபைகள், சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் தலைவர்களுக்கும் வினியோகிக்கும்படி, நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில், பிரதிகள் வாங்கிக்கொள்ளுங்கள். இதன் விலை ரூ. 10/- மட்டுமே.

- ☐ தமிழில் பிரசங்கிக்கப்பட்ட இச்செய்தி ஒலி, ஒளித்தட்டுகளிலும் கிடைக்கும். விபரங்களுக்கு எழுதுங்கள்.

- ☐ இச்செய்தி ஆங்கிலத்தில் ஆசிரியரின் இணைய தளத்தில் (stanleyonbible.com) உண்டு. திருச்சபைச் சீர்திருத்தச் சத்தியங்கள் எங்கும் பரவிட அதனை உங்கள் நண்பர்களுக்கு அனுப்பி வையுங்கள்.

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>*
*<evangeline@stanleyonbible.com>*

# HERE I STAND!
# நான் நிற்கும் கன்மலை

திருச்சபைச் சீர்திருத்தவாதிகளில் மிக முக்கியமானவராகிய
மார்ட்டின் லூத்தர் (1483-1546) ஜெர்மனியிலுள்ள
விட்டன்பர்க் நகர்ப் பேராலயக் கதவில்
1517 அக்டோபர் 31 அன்று தனது 95 நியாயங்களை (Theses)
ஆணியறைந்தார். 2017ஆம் ஆண்டில் சீர்திருத்தத்தின்
500ஆம் ஆண்டு நிறைவடைகிறது.
சீர்திருத்தவாதிகளின் இறையியல் கருத்துகளைச்
சுருக்கிக் கூறும் கீழ்க்கண்ட 5 லத்தீன் முழக்கங்கள் மூலம்
இச்சிறுநூலில் ஒரு வேதபாடம்...

1. *Sola Scriptura*

"பைபிள் மட்டுமே!"

2. *Sola Fide*

"விசுவாசம் மட்டுமே!"

3. *Sola Gratia*

"கிருபை மட்டுமே!"

4. *Solo Christo*

"கிறிஸ்து மட்டுமே!"

5. *Soli Deo Gloria*

"தேவ மகிமை மட்டுமே!"

சீர்திருத்தத்திற்குத் திறவுகோல் வசனம்:

*"விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்!"*

(ரோமர் 1:17)